# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my | Media_Selangor | SelangorTV selangortv.my | MediaSelangor | SMART SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது வருடம் பங்குனி மாதம் / மார்ச் 03/2024 / MARCH 03/2024




# பல்வேறு திட்டங்களின் வழி இளைஞர்களுக்கு

## வேலை வாய்ப்புகளை உருவாக்க மாநில அரசு பாடுபடுகிறது

**ஷா ஆலம்-**

சிலாங்கூரில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது.

இது சீமென்ஸ், ஆப்பிள் இன்ச் மற்றும் டசால்ட் சிஸ்டம் போன்ற சர்வதேச தொழில்நுட்ப வழங்குநர்களுடனான ஒத்துழைப்பையும் உள்ளடக்கியதாக டத்தோ மந்திரி புசார் கூறினார்.

கடந்த ஆண்டு சிலாங்கூர் திறமையான மற்றும் ஓரளவு திறமையான தொழிலாளர்களால் நிரப்பப்படுவதற்குச் சுமார் 33,000 வேலை வாய்ப்புகளை உருவாக்க முடிந்தது என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி விளக்கினார்.

“இந்த வேலை வாய்ப்புகளுக்குப் பல்வேறு துறைகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் தேவைப்படும் திறன் பகுதிகளையும் உள்ளடக்கியது. எனவே நாங்கள் STDC இல் (சிலாங்கூர் மாநில தொழில்நுட்ப திறன் மேம்பாட்டு மையம்) தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சிகளை ஒழுங்கு படுத்துகிறோம்,” என்று அவர் இன்று சிலாங்கூர் மாநில சட்டமன்ற அமர்வில் கூறினார்.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை அறிய விரும்பிய செமினி சட்டமன்ற உறுப்பினர் நூசி மாஹவுட்ஸ் அவர்களின் கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

“சமீபத்தில் நான் மலேசிய தொழில்நுட்ப வாரியத்துடன் ஒரு கூட்டத்தை நடத்தினேன். அதில் யூனி செல்லில் (சிலாங்கூர் பல்கலைக்கழகம்) பொறியியல் புலம், தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் துறைகளையும் எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றி விவாதிக்கப்பட்டது.

“ஜோம் கெர்ஜா திட்டத்தை நாங்கள் வருடத்திற்கு மூன்று முறை செயல்படுத்துகிறோம். மேலும் மாநில அரசு வழங்கும் ஒதுக்கீட்டைப் பொறுத்து இந்த திட்டத்தை அதிகரிக்க முடியும் என்று நான் நம்புகிறேன்,” என அவர் கூறினார்.

# வெ.5,530 கோடி முதலீடு - 30,000 பேருக்கு வேலை வாய்ப்பு

**கோல சிலாங்கூர்-**

கடந்தாண்டு சிலாங்கூர் மாநிலம் ஈர்த்துள்ள 5,530 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீடுகளின் வாயிலாகப் பல்வேறு துறைகளில் 30,000 புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் கடுமையான வெள்ளம் போன்ற பேரிடர்களை எதிர்கொண்ட போதிலும் சந்தையின் தேவையை நிறைவு செய்யும் வகையில் தேவையான வேலை வாய்ப்புகளை மாநில அரசினால் உருவாக்க முடிந்ததாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

நடப்பு தேவைகளை ஈடு செய்வதற்காகத் தொழில்நுட்ப மற்றும் தொழில்திறன் திட்டங்கள் அல்லது கல்விக்கூடங்களை (திவேட்) அமைக்கும் முயற்சியில் மாநில அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

உதாரணத்திற்கு எஸ்.டி.டி.சி.யைக் (சிலாங்கூர் மாநில தொழில்திறன் மேம்பாட்டு மையம்) கூறலாம். வளர்ச்சியடைந்த மாநிலமாக ஆவதற்கான முன்னேற்பாடாகவும் வட்டார மனித ஆற்றல் தேவையை ஈடுசெய்வதற்காகவும் திவேட் திட்டத்திற்கு நாங்கள் முன்னுரிமை அளித்து வருகிறோம் என்று அவர் சொன்னார்.

நாட்டின் மற்றும் மாநிலத்தின் தேவையை ஈடு செய்வதற்காக திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு வியூகங்களுடன் இத்தகைய கல்விக்கூடங்களை உருவாக்குவது அவசியம் என அவர் சொன்னார்.

இங்கு நடைபெற்ற 2024ஆம் ஆண்டிற்கான மந்திரி புசார் கிண்ண சொற்போர் போட்டியை முடித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்பென்ஸ் அனைத்துலகக் கல்லூரி என அழைக்கப்பட்ட இந்த தொழில்கல்விக் கூடம் கடந்த 2020ஆம் ஆண்டு எஸ்.டி.டி.சி. என உருமாற்றம் செய்யப்பட்டது.

## சட்டமன்றம் அவதூறு பரப்பும் களமாக அல்லாமல்
# இணக்கமான சூழலில் நடைபெற வேண்டும்

**ஷா ஆலம்-**
சிலாங்கூர் மாநில சட்டமன்றக் கூட்டம் உயர்நெறி மற்றும் பொறுப்புடன் நடைபெறுவதோடு மக்களுக்கு முன்னுதாரணமாகவும் இருக்கும் என்று தாம் நம்புவதாக மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் கூறினார்.

விவாதங்கள் சூழல் இணக்கமான சூழலிலும் நியாயமான முறையிலும் இருக்க வேண்டும் என்பதோடு அவதூறுகளை பரப்புவதற்கும் உணர்ச்சிகரமான விஷயங்கள் மற்றும் போலிச் செய்திகளை பெரிதுபடுத்துவதற்கும் ஒரு களமாக பயன்படுத்தக்கூடாது என்று சுல்தான் ஷராஃபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ், தெரிவித்தார்.

நியாயமான முறையிலும் ஒருவருக்கொருவர் சகிப்புத்தன்மையுடன் செயல்படவும் மக்களுக்கும் மாநிலத்திற்கும் நன்மை பயக்கும் விஷயங்களை தங்கள் விவாதங்களில் மையப்படுத்தவும் வேண்டுமாய் சபாநாயகர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன் என்று அவர் கூறினார்.



இங்கு 15வது சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தின் இரண்டாம் தவணைக்கான முதலாவது கூட்டத் தொடரைத் தொடக்கி வைத்து உரையாற்றுகையில் மேன்மை தங்கிய சுல்தான் இவ்வாறு தெரிவித்தார்.

நமக்கு கிடைத்துள்ள அமைதி, சுபிட்சம் மற்றும் பாதுகாப்புக்காக நன்றி தெரிவிக்கும் அதேவேளையில் சிறந்த ஒற்றுமை உணர்வை தொடர்ந்து வலுப்படுத்த வேண்டும் என்றும் மாநில மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

நம்மிடம் இருக்கும் குறைபாடுகளை சரிசெய்ய முயற்சிப்போம். சர்ச்சைகளிலிருந்து விலகியிருப்போம். தீங்கு விளைவிக்கும் அனைத்து செயல்களையும் குறிப்பாக ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தைத் தவிர்ப்போம் என்று அவர் தமதுரையில் குறிப்பிட்டார்.

## மிட்லண்டஸ் தமிழ்ப்பள்ளி தங்கும் விடுதி
# விண்ணப்பம் செய்யுங்கள்



**ஷா ஆலம்-**
இங்குள்ள செக்ஷன் 7 வட்டாரத்தில் இயங்கி வரும் மிட்லண்ட்ஸ் தோட்டத் தமிழ் பள்ளியின் மாணவர் தங்கும் விடுதி அடுத்த கட்டமாக மேலும் மாணவர்கள் தங்கி கல்வி கற்பதற்கு ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

இதன் தொடர்பாக வசதி குறைந்த மாணவர்கள் குறிப்பாகப் பள்ளிக்கு செல்வதற்கும் கல்வி கற்பதற்கும் சிரமங்களை எதிர்நோக்கும் குடும்ப பின்னணியில் உள்ள மாணவர்கள் விண்ணப்பம் செய்யலாம்.

இந்த வசதி நான்காம் மற்றும் ஐந்தாம் வகுப்புகளில் பயிலவிருக்கும் ஆண் மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது. இது தொடர்பாக மேலும் விவரங்களுக்கு மிட்லண்ட்ஸ் தோட்டத் தமிழ் பள்ளியைத் தொடர்பு கொள்ளலாம்.

இந்த தங்கும் விடுதியில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் பெற்றோர்கள் **0178906852** என்ற எண்களில் மூர்த்தி என்பவரை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



## மகா மாரியம்மன் ஆலய ஏற்பாட்டில்
# மாணவர்களுக்குப் புத்தகப் பைகள் விநியோகம்

**பந்திங்-**
கோலலங்காட் நாடாளுமன்ற தொகுதியில் உள்ள தெலுக் பங்லீமா காராங் அருள்மிகு மாரியம்மன் கோவில் நிர்வாகம் நேற்று மாணவர்களுக்குப் புத்தகப் பைகளை வழங்கி பேருதவி புரிந்தது.

கோவில் தலைவர் செல்வநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிலாங்கூர் மாநில ஆட்சிக் குழு உறுப்பினர் ராய்டு கலந்து சிறப்பித்தார்.

வரும் மார்ச் மாதம் 11 ஆம் தேதி பள்ளி தொடங்கும் வேளையில் வசதி குறைந்த மாணவர்களுக்கு புத்தக பைகளை வழங்கிய கோவில் நிர்வாகத்தைப் பந்திங் சட்டமன்ற உறுப்பினருமான ராய்டு வெகுவாகப் பாராட்டினர்.

நிகழ்வில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அதிக அளவில் கலந்து கொண்டது பாராட்டுக்குரியது.

தங்கள் பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்க பெற்றோர்கள் தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

## தமிழை படித்ததால்
## ஆட்சிக் குழு
# உறுப்பினராக இருக்கிறேன்

**பெட்டாலிங் ஜெயா-**
தெலுக் இந்தான் சிதம்பரம் தமிழ்ப் பள்ளியில் படித்ததால் இன்று சிலாங்கூர் மாநில ஆட்சிக் குழு உறுப்பினராக இருக்கிறேன் என்று சிலாங்கூர் மாநில ஆட்சிக் குழு உறுப்பினர் ராய்டு பெருமையுடன் குறிப்பிட்டார்.

தமிழ்ப் பள்ளியில் படித்ததை எண்ணி நான் பெருமை படுகிறேன். என் சகோதரர் கணபதி ராவ் அவர்களும் தமிழ்ப் பள்ளியில் படித்தவர். நானும் எனது அண்ணனும் ஆட்சிக் குழு உறுப்பினராக வருவோம் என்று என் தந்தை கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்.

தமிழ் யாரையும் கைவிடாது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும் என்று அவர் சொன்னார். என் பிள்ளைகளும் தமிழ்ப் பள்ளிகளில் படித்தவர்கள். தமிழ்ப் பள்ளியில் படித்தவர்கள் இன்று எல்லா துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். மொழி அழிந்தால் அந்த இனம் அழிந்து விடும். பல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்தாலும் அங்கு தமிழ்ப் பள்ளிகள் இல்லை. ஆனால் மலேசியாவில் 500க்கும் மேற்பட்ட தமிழ்ப் பள்ளிகள் உள்ளன.

இந்த பள்ளிகளை தொடர்ந்து காப்பாற்ற வேண்டிய கடப்பாடு அனைத்து இந்தியர்களுக்கும் இருக்கிறது என்று அவர் சொன்னார். மலேசிய திருமுருகன் திருவாக்கு திருப்பீடத்தின் தவத்திரு பாலயோகி சுவாமிகளின் ஆசியோடு இன்று பெட்டாலிங் ஜெயா ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் மண்டபத்தில் இந்து கலைக்களஞ்சியத்தை தமிழ்ப் பள்ளிகளுக்கு வழங்கும் விழாவுக்கு தலைமை தாங்கியபோது அவர் இதனை தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கம்போங் பூங்கா ராயா குடியிருப்பின் 118 குடும்பங்களுக்கும் மாற்று வீடுகள்



**ஷா ஆலம்-**

சுங்கை பூலோ, கம்போங் பூங்கா ராயா ரூமா பாஞ்சாங் குடியிருப்பைச் சேர்ந்த அனைத்து 118 குடும்பங்களுக்கும் மாற்று வீடுகளை வழங்க மாநில அரசு முன்வந்துள்ளது. இதன் வழி முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அந்த கிராம மக்கள் எதிர்நோக்கியிருந்த குடியிருப்பு பிரச்சனைக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது.

ஈஜோக், புஞ்சா ஆலமிலுள்ள ஆலம் பெர்டானா வீடமைப்பு பகுதியில் சம்நதப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு சிலாங்கூர் கூ வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக வறுமை ஒழிப்பு மற்றும் சமூக நலத்துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.பாப்பாராய்டு கூறினார்.

**ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் வெள்ளி மதிப்புள்ள இந்த வீடுகள் சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு வெறும் 42,000 வெள்ளி விலையில் விற்கப்படுவதாக கூறிய அவர், இதற்கான விண்ணப்பங்களை சிலாங்கூர் மாநில வீடமைப்பு மற்றும் சொத்துடைமை வாரியத்திடம் விரைந்து சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டார்.**

இந்த வீடுகளை கொள்முதல் செய்வதற்கு இதுவரை 36 பேரிடமிருந்து எங்களுக்கு விண்ணப்பங்கள் கிடைத்து ஒப்புதல் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 2 விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே சிலாங்கூர் கூ வீடுகளுக்கு விண்ணப்பம் செய்துள்ளது விண்ணப்பங்களை பரிசீலனை செய்து போது தெரிய வந்தது.

எஞ்சிய குடியிருப்பாளர்கள் விண்ணப்பங்களை விரைவாக சமர்ப்பிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம். அவர்களின் விண்ணப்பங்கள் கட்டங் கட்டமாக பரிசீலிக்கப்பட்டு வீடுகள் வழங்கப்படும் என இன்று தமது அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் சொன்னார்.

விண்ணப்பதாரர்கள் இறந்திருந்தால் அல்லது திவால் உள்ளிட்ட சிக்கல்களை எதிர்நோக்கியிருந்தால் அவர்களுக்கு உதவி புரியவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். முறையான ஆவணங்கள் இருக்கும் பட்சத்தில் அவர்களின் வாரிசுகள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் வீடுகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்றார் அவர்.

இந்த தாமான் பெர்டானா குடியிருப்பு கம்போங் பூங்கா ராயாவிலிருந்து 7.8 கிலோ மீட்டர் தொலைவில்தான் உள்ளது. இந்த வாய்ப்பினை சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொண்டு விண்ணப்பாரங்களை ஒரு வார காலத்தில் எனது அலுவலகத்தில் சமர்ப்பிப்பார்கள் என எதிர்பார்க்கிறேன் என்று அவர் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் கோத்தா டாமன்சாரா சட்டமன்ற உறுப்பினர் முகமது இஸூவான் காசிம், சுங்கை பூலோ முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சிவராசா மற்றும் வீடமைப்பு மற்றும் சொத்துடைமை மேம்பாட்டு வாரியம், வீடமைப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் அலுவலகம், மற்றும் குடியிருப்பாளர் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



# மடாணி அரசு தொழில் முனைவர்களுக்கு 6.5 கோடி ரிங்கிட் நிதி ஒதுக்கீடு

**கோத்தா டமன்சாரா-**

தொழில் முனைவோர் மற்றும் கூட்டுறவு அமைச்சின் கீழ் 2024 ஆண்டுக்கு 6.5 கோடி ரிங்கிட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மடாணி அரசின் சிலாங்கூர் மாநில அளவிலான தெக்கூன் விழாவை அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைத்து உரையாற்றிய போது அதன் துணை அமைச்சர் டத்தோ ரமணன் தெரிவித்தார்.

இந்த 6.5 கோடி ரிங்கிட் 4000 தொழில் முனைவோர்களுக்கு கொடுக்க திட்டமிட்டுள்ளது. இவ்வாண்டு ஜனவரி மாதம் வரையில் 7.35 மில்லியன் ரிங்கிட் சிலாங்கூர் தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று அவர் சுங்கை பூலோ நாடாளுமன்ற தொகுதியில் உள்ள கோத்த டமன்சாரா (STRAND Mall) ஸ்டிரன் பேரங்காடியில் நடைபெற்ற தெக்கூன் விழாவில் தெரிவித்தார்.

சிலாங்கூரில் உள்ள தொழில் முனைவோர்கள் சொந்த தொழிலில் ஈடுபட முன்பணமாக தெக்கூன் கடன் உதவி மடாணி அரசால் வழங்கப்பட்டது. இந்த மடாணி தெக்கூன் விழா 3 நாட்களுக்கு கோத்தா டமன்சாராவில் நடைபெற்றது.

இவ்விழாவில் தெக்கூன் கடனுதவி, எஸ்.எம்.வி கடன் உதவி போன்ற கடன் உதவிகளுக்கான விளக்கம் கொடுக்கப்படுகின்றன. அதே வேளையில் சேமநிதி வாரியம், சொக்சோ குறித்தும் பொது மக்களுக்கு விளக்கம் கொடுக்க முகப்பு சேவைகள் திறக்கப் பட்டுள்ளன.

இதே போல் தெக்கூன் கடன் உதவி பெற்று வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள சில நிறுவனங்களும் தங்கள் பொருட்களை இங்கு விற்கின்றன. ரஹ்மாவும் தனது விற்பனை கடையை 3 நாட்களுக்கு திறந்துள்ளன.

மேலும் இவ்விழாவில் வெற்றி பெற்ற 10 தொழில் முனைவோர்களுக்கு நற்சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு கொடுத்து கௌரவிக்கப்பட்டனர்.

தெக்கூன் கடன் உதவித் திட்டம் 1998 ஆம் ஆண்டு முதல் செயல் படுகிறது. இவ்வாண்டு ஜனவரி மாதம் வரையில் மொத்தம் 573,348 பேருக்கு ரிங்கிட் மலேசியா 915 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் சிலாங்கூர் மாநில தொழில் முனைவோர்களுக்கு மட்டும் ரி.ம. 127 கோடி வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தெக்கூன் தலைவர் டத்தோ ஹாஜி அப்துல்லா சானி, கோத்த டமன்சாரா சட்டமன்ற உறுப்பினர் துவான் இசூவான் காசிம், டத்தோ அன்புமணி, பினாங்கு சட்ட மன்ற் உறுப்பினர் துவான் குமரேசன் மற்றும் பலர் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# RM1,000 உயர்கல்வி உதவித்தொகை திட்டம்




**ஷா ஆலம்-**

எதிர்வரும் மார்ச் 15 முதல் ஏப்ரல் 15 வரை RM5,000 மற்றும் அதற்கும் குறைவான வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த சிலாங்கூரில் பிறந்த உயர்கல்விகூட மாணவர்கள் RM1,000 ரொக்க ஊக்க தொகைக்கு விண்ணப்பிக்க அழைக்கப்படுகிறார்கள்.

இந்த உயர்கல்வி உதவித்தொகை திட்டம் (HPIPT) 3,000 மாணவர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது மற்றும் விண்ணப்பப் படிவத்தை https://edanapendidikan.selangor.gov.my ஐ நாடுவதன் மூலம் பூர்த்தி செய்யலாம் என மாநில அரசு செயலாளரின் அலுவலகம் முகநூலில் தெரிவித்தது.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப நிபந்தனைகளைப் பார்வையிடவும் மற்றும் பதிந்து கொள்ளவும் சுவரொட்டியில் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யலாம்.

கடந்த ஆண்டு நவம்பரில் 2024 பட்ஜெட்டை தாக்கல் செய்தபோது, இத்திட்டத்தைத் தொடர 3 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கப்பட்டதாக டத்தோ மந்திரி புசார் கூறினார்.

மேலும், சிலாங்கூர் மாநில கல்வி உதவித்தொகை நிதியும் (TKWBNS) மாநிலத்தில் கல்வியை மேம்படுத்துவதற்காக RM9 மில்லியன் நிதியுடன் தொடரப்படும் என அவர் அறிவித்தார்.

இந்த ஆண்டு மொத்தம் 2,500 மாணவர்கள் தங்கள் படிப்பைத் தொடர்வதற்காக அவர்களின் சுமையைக் குறைக்க அடிப்படைப் பல்கலைக்கழக கட்டண உதவியைப் (பாயு) பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

# பல்லின சமூகத்தில் புரிந்துணர்வை வளர்ப்போம்

**அம்பாங் ஜெயா-**

கோம்பாக் நாடாளுமன்றத் தொகுதி சமூக சேவை மையத்தின் ஏற்பாட்டில் இங்குள்ள மெலாவத்தி மாநாட்டு மையத்தில் நடைபெற்ற சீனப்புத்தாண்டு பொது உபசரிப்பு நிகழ்வில் 1,500க்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த பொது உபசரிப்பு நிகழ்வானது கோம்பாக் தொகுதியிலுள்ள சீன சமூகத்தினரை மகிழ்ச்சிப்படுத்துவதை மட்டுமின்றி இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது என்று மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

பல்லின மக்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் வலுப்படுத்துவதன் மூலம் மலேசியா மடாணி உணர்வுக்கு மேலும் புத்தெழுச்சியை ஏற்படுத்துவதையும் இந்த நிகழ்வு நோக்கமாக கொண்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டிற்கு மிகவும் அத்தியாவசியமானதாக விளங்கும் இந்த நல்லிணக்கத்தை தொடர்ந்து நிலை நிறுத்துவேன் என்று வளர்ச்சியடைந்த மற்றும் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கியப் பங்காற்றும் மாநிலத்தின் பொறுப்புமிக்கத் தலைவர் என்ற முறையில் நான் உறுதியளிக்கிறேன் என்று அவர் சொன்னார்.

பன்னிரண்டாவது மலேசியத் திட்டத்தின் கீழ் 99.6 விழுக்காட்டு திட்டங்களை சிலாங்கூர் பூர்த்தி செய்துள்ளதோடு இந்த சிறப்பான அடைவு நிலையைப் பதிவு செய்த மூன்று மாநிலங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது என்றார் அவர்.

நாடு மற்றும் மாநிலம் மறுபடியும் மீட்சி பெறுவதற்கான நேர்மறையான அறிகுறியாக இந்த அடைவு நிலையை நான் பார்க்கிறேன் என்று அவர் தெரிவித்தார்.

# மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுக் கையிருப்பு

**தஞ்சோங் காராங்-**

சிலாங்கூர் மாநிலத்தின் உணவுக் கையிருப்பு வறட்சி காலம் உள்ளிட்ட பேரிடர்களின் போது குறைந்தது மூன்று மாதங்களுக்கான தேவையை ஈடுசெய்யும் அளவுக்குப் போதுமானதாக இருக்கும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

மாநிலத்தின் தென் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் உணவு கையிருப்புக் கிடங்கு கார்போஹைட்ரட் மற்றும் புரோட்டின் சார்ந்த உணவுகளான அரிசி மற்றும் கோழி போன்றவற்றைச் சேமித்து வைப்பதற்குப் பயன்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் சொன்னார்.

இந்த சேமிப்புக் கிடங்கு நிர்மாணிக்கப்பட்டவுடன் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவு கையிருப்பை சிலாங்கூர் கொண்டிருக்கும். போர் ஏற்படும் பட்சத்தில் அரிசியை இறக்குமதி செய்ய இயலாது. இருந்த போதிலும் நம்மிடம் போதுமான உணவுக் கையிருப்பு இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுக் கையிருப்பை கொண்டிருக்கும் ஒரே மாநிலமாகச் சிலாங்கூர் விளங்குகிறது என்று செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

சிலாங்கூர் மாநிலத்திலுள்ள எழுபது லட்சம் மக்கள் தொகையைக் கருத்தில் கொள்கையில் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுக் கையிருப்பைக் கொண்டிருப்பது பொருத்தமான ஒன்றாகும் என அவர் சொன்னார்.

இதனிடையே, மக்களின் வாழ்க்கைச் செலவின அதிகரிப்பைச் சமாளிக்கும் நோக்கில் மாநில அரசினால் அமல்படுத்தப்பட்ட ஏஹ்சான் ராக்யாட் மலிவு விற்பனையையும் மடாணி மலிவு விற்பனையையும் ஒருங்கிணைப்பாகும் நடவடிக்கையில் மாநில அரசு ஈடுபட்டு வருவதாக அமிருடின் சொன்னார்.

உள்நாட்டு வர்த்தக மற்றும் பயனீட்டாளர் விவகார அமைச்சின் ஒத்துழைப்புடன் நடத்தப்படும் ஏஹ்சான் ரஹ்மா விற்பனையை போன்ற விற்பனைத் திட்டத்தின் வாயிலாகக் கட்டுபடி விலையில் பொருள்களை வாங்குவதற்குரிய கூடுதல் அனுகூலம் மக்களுக்குக் கிடைக்கும் என்றார் அவர்.



# மலேசியா சிறந்த துறைமுகச் சேவை வழங்குநராக இருக்கும்

**ஷா ஆலம்-**

கேரித் தீவில் மூன்றாவது துறைமுகத்தை உருவாக்குவது, மலேசியா தொடர்ந்து பிராந்தியத்தில் சிறந்த மற்றும் பிரீமியம் துறைமுக சேவை வழங்குநராக இருப்பதை உறுதி செய்யும்.

தெற்கு சிலாங்கூர் ஒருங்கிணைந்த வளர்ச்சி பகுதி திட்டத்தின் (IDRISS) கீழ் உள்ள திட்டம் மாநிலத்திற்கு தொடர்ச்சியான பொருளாதார வருவாயை வழங்கும் என்று டத்தோ மந்திரி புசார் கூறினார்.

முன்மொழிவு கட்டத்தில், திட்டத்தின் சாத்தியக்கூறுகள் கிள்ளான் துறைமுக ஆணையத்தால் தயாரிக்கப்பட்டு போக்குவரத்து அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்டது என அவர் கூறினார்.

"இந்த கட்டத்தில் நாங்கள் பல தரப்பினருடனான முன் ஒப்பந்தத்தை ஆய்வு செய்து, வளர்ச்சி ஒத்துழைப்பை ஆய்வு செய்வதற்காக சிலாங்கூர் மாநில மேம்பாட்டுக் கழகத்திடம் சமர்ப்பித்து வருகிறோம்," என்று அவர் கூறினார்.

பிராந்திய துறைமுக சேவை வழங்குநர்களுடன் மலேசியா தொடர்ந்து போட்டியிடுவதை உறுதி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் துறைமுகத்தை மேம்படுத்தும் எண்ணம் மத்திய அரசால் வெளிப்படுத்தப்பட்டது என்று அமிருடின் கூறினார்.

நாட்டிற்கு அதன் சொந்த வலையமைப்பு தேவை என்றும், வடக்கு மற்றும் மேற்கு துறைமுகங்களை மட்டும் நம்பி இருக்க முடியாது, ஏனெனில் அவை எதிர் காலத்திற்கு போதுமானதாக இல்லை என்றும் அவர் விளக்கினார்.

"கேரி தீவில் இருந்து வடக்கு துறைமுகம் வரை, அதன் பரப்பளவு சிங்கப்பூர் நாட்டை போன்றது என மதிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய அளவு மிகவும் சிறந்த மற்றும் பிரீமியம் சேவையை வழங்க முடியும்.

முன்னதாக, கேரி தீவில் மூன்றாவது முனையத்தின் மேம்பாடு 2060 ஆம் ஆண்டளவில் RM40.2பில்லியன் மொத்த மதிப்பை வழங்கும் என்று போக்குவரத்து அமைச்சர் அந்தோனி லோக் கூறினார்.

# பழுதடைந்த சாலைகளைச் சீரமைக்கும் பணி தொடரும்

**கோல சிலாங்கூர்-**

மக்களின் வசதி மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மாநிலம் முழுவதும் உள்ள பழுதடைந்த சாலைகளைச் சீரமைக்கும் பணிகளை மாநில அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

இந்த சீரமைப்பு பணி, சாலைகளில் ஏற்பட்டுள்ள குழிகளை சரிசெய்வதை மட்டுமின்றி இதர அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியிருக்கும் என்று அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.

சாலைகளை தரம் உயர்த்தும் பணிக்காக மாநில அரசு ஒவ்வோராண்டும் ஒரு கோடி வெள்ளியை ஒதுக்கீடு செய்கிறது. இந்த நிதியைக் கொண்டு சாலை கட்டமைப்பை தரம் உயர்த்த மட்டுமே முடியும். இதர அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள இந்த நிதி ஒதுக்கீடு போதாது என்று அவர் சொன்னார்.

உடனடியாக சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய அளவுக்கு மோசமான நிலையில் உள்ள சாலைகளின் பட்டியலை தாங்கள் தயாரித்து வருவதாக இங்கு நீர் ஆதார உத்தவாதத் திட்டத்தைப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநிலத்தைப் பொறுத்த வரை நூற்றுக்கணக்கான சாலைகளில் பாதிக்கும் மேற்பட்டவை ஆயுள் காலம் காலாவதியானவையாக உள்ளன. ஒரு சாலையின் ஆயுள் காலம் 20 முதல் 25 ஆண்டுகள் வரை மட்டுமே ஆகும் என்றார் அவர்.

கடந்தாண்டு மாநிலத்தின் ஒன்பது மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளில் சாலை சீரமைப்புப் பணிகளை மாநில அரசு பெரிய அளவில் மேற்கொண்டது. மொத்தம் 118 சீரமைப்புத் திட்டங்கள் வாயிலாக மொத்தம் 94.9 கிலோ மீட்டர் தொலைவுக்குச் சாலைகள் செப்பனிடப்பட்டன.

**SELANGOR INDRU**
Sidang pengarang
**PENASIHAT**
Lembaga Editorial MSSB
**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar
**KETUA PENGARANG**
A.Pakiyanathan
**PENOLONG PENGARANG**
Rajah Ramaya
**ARTIS GRAFIK**
Kathiravan Manoharan
**JURUGAMBAR**
Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof
**Aras 11, Menara Bank**
**Rakat, No1 Jalan Indah**
**14/8, Seksyen**
**14, 4000 Shah Alam.**
*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*




# ஆகாய ஊர்திகளின் கண்காட்சி
# RM1.3 பில்லியன் பரிவர்த்தனை

**பெட்டாலிங் ஜெயா-**
இந்த ஆண்டும் சிலாங்கூர் ஆகாய ஊர்திகளின் கண்காட்சி (SAS) 2024, RM1.3 பில்லியன் பரிவர்த்தனை மதிப்பை இலக்காகக் கொண்டு தொடர்கிறது.

செப்டம்பர் 12 முதல் 14 வரை சுபாங்கில் நடைபெறவுள்ள "Skypark RAC` நிகழ்ச்சிக்கு 25,000 வருகையாளர்கள் இலக்காகக் கொண்டுள்ளனர் என்று முதலீட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

"SAS 2024 யில் விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் தேடல் மற்றும் மீட்பு பிரிவுகள் போன்ற புதிய பிரிவுகளை வழங்குவது உட்பட பல்வேறு சுவாரஸ்யமான திட்டங்கள் மற்றும் செயல் பாடுகளும் இடம்பெறும்.

"மேலும், இன்வெஸ்ட் சிலாங்கூர் ஏற்பாடு செய்திருக்கும் இந்த விமானக் கண்காட்சியில் சிங்கப்பூர், கொரியா, சீனா மற்றும் டென்மார்க் உட்பட 45 நாடுகள் பங்கேற்கும்" என்று அவர் ஷெரட்டன் ஹோட்டலில் "SAS" 2024 செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

இதில் இன்வெஸ்ட் சிலாங்கூர் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி டத்தோ ஹசன் அஸ்ஹாரி மற்றும் சிலாங்கூர் டாருல் எஹ்சான் விண்வெளித் தொழில் ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் மூத்த இயக்குநர் ஜேமி ஹனிஃப் ராம்லீ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தில் பங்கு பெற ஆர்வமுள்ள தொழில்துறையினர் மே 31க்கு முன் SAS செயலகத்திற்கு enquiry@selangoraviationshow.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் தொடர்பு கொண்டு 5 சதவீத தள்ளுபடியைப் பெறலாம் என அவர் கூறினார்.

முன்னதாக விமான கண்காட்சிகளில் பங்கேற்ற கண்காட்சியாளர்களும் 10 சதவீத தள்ளுபடியை அனுபவிக்கலாம்.

# 681 மின்சார வாகன (EV)
## சார்ஜிங் யூனிட்டுகள் நிறுவப்பட்டுள்ளன

**ஷா ஆலம்-**
மாநிலம் முழுவதும் 2025 ஆம் ஆண்டுக்குள் 1,000 நிலையங்களைக் கட்டுவதற்கான இலக்கை நிர்ணயித்துள்ளது. இதுவரை மொத்தம் 681 மின்சார வாகன (EV) சார்ஜிங் யூனிட்டுகள் நிறுவப் பட்டுள்ளன என்று சுற்றுச்சூழல் ஆட்சிக்குழு உறுப்பினர் ஜமாலியா ஜமாலுடின் இன்று சிலாங்கூர் மாநிலச் சட்டமன்ற (டினஸ்எஸ்) அமர்வில் எழுப்பிய கேள்விக்கு இவ்வாறு பதிலளித்தார்.

"இலவசப் பார்க்கிங் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க ஊக்குவிப்புகளை வழங்குவதற்கான வழிமுறைகளையும் மாநில அரசு ஆலோசித்து வருகிறது," என்று அவர் கூறினார்.

இதற்கிடையில், ஷா ஆலம் மாநகராட்சி மாநிலம் முழுவதும் EV சார்ஜர்களை நிறுவுவது தொடர்பான வழிகாட்டுதல்களை தயாரித்து அளிக்கும் ஒரு முன்னோடி திட்டத்தையும் நடத்தி வருகிறது என்றார்.

இத் திட்டத்தைப் பிற பகுதிகளில் அமல்படுத்தும் எண்ணத்தை மாநில அரசிடம் முன்வைக்கும் முன்பாக உள்ளாட்சி அமைப்பு (பிபிடி) அதை ஆழமாக ஆய்வு செய்யும் என்று அவர் விளக்கினார்.

# கடன் பாக்கி தொடர்பான
## விபரங்களை இணையம் வழி அறிய வாய்ப்பு

**ஷா ஆலம்-**
யாயாசான் ஹிஜ்ரா சிலாங்கூர் அறவாரியத்தின் (ஹிஜ்ரா) தொழில்முனைவோர் இப்போது தங்கள் வணிக கடன் பாக்கி தொடர்பான விபரங்களை இணையம் வழி சரிபார்க்கலாம்.

வணிக கடன் பாக்கி தொடர்பான விபரங்களை அறிய சம்பந்தப்பட்ட தொழில்முனைவோர் http://mikrokredit.selangor.gov.my/ என்ற அகப்பக்கம் மூலம் தங்களைப் பதிவு செய்யலாம் என்று ஹிஜ்ரா சிலாங்கூர் அறிவித்துள்ளது.

உதவி தேவைப்படுவோர் கிளை அலுவலகங்களில் உள்ள கடன் வசூலிப்பு அதிகாரியை நேரில் சென்று காணலாம். ஹிஜ்ரா சிலாங்கூர் நிதியளிப்பு பிரசுரங்களை பதிவிறக்கம் செய்ய https://www.hijrahselangor.com/rilahan-skim-hijrah.../ இணைப்பை நாடவும்.

கடந்த 2015ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஹிஜ்ரா, சிறு தொழில்களைத் தொடங்க அல்லது வணிகங்களை மேம்படுத்த விரும்புவோருக்கு மூலதன கடனுதவியை வழங்கி வருகிறது.

ஐ-பிசினஸ், ஐ-பெர்மூசிம், நியாகா டாருல் எஹ்சான் (நாடி), கோ டிஜிட்டல் மற்றும் ஜீரோ டு ஹீரோ ஆகிய கடனுதவித் திட்டங்களை ஹிஜ்ரா அறிமுகப்படுத்தியுள்ளது.




# மாணவர்களுக்கு கணினி அன்பளிப்பு

**கோலசிலாங்கூர்-**
கோல சிலாங்கூர்,புக்கிட் மெலாவத்தி சட்டமன்ற தொகுதியில் உள்ள 5 வசதி குறைந்த கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு சிலாங்கூர் மந்திரி புசார் நிறுவனம் (எம்.பி.ஐ.) மடிக்கணினியை இலவசமாக வழங்கியது. புக்கிட் மெலாவத்தி சட்ட மன்ற தொகுதியின் ஒருங்கிணைப்பாளர் துவான் தீபன் சுப்ரமணியம் எடுத்து வழங்கினார்.

சிலாங்கூர் மாநில மந்திரி புசார் கழகம் வசதி குறைந்த மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு வருடந்தோறும் உதவி கரம் நீட்டி வருகிறது. அதன் அடிப்படையில் டிப்ளோமா படிக்கும் 4 மாணவர்களும் அறிவியல் துறையில் பட்டப்படிப்பு மேற்கொள்ளும் ஒரு மாணவருக்கு மடிக்கணினி வழங்கப்பட்டது.

தனித்து வாழும் தாய்மார்கள் மற்றும் வசதி குறைந்த மாணவர்களின் உயர் கல்விக்கு உதவ வேண்டும் என்ற சமூக உன்னத நோக்கத்துடன் இச்சேவையை எம்.பி.ஐ. நிறுவனம் செய்து கொண்டு வருகிறது என்று அதன் அதிகாரி துவான் சக்வான் தெரிவித்தார்.

வசதி குறைந்த மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திக்கு எம்.பி.ஐ. தொடர்ந்து உதவிக் கரம் கொடுக்க வேண்டும் என்று தீபன் கேட்டுக் கொண்டார். மேலும் சிலாங்கூர் மாநில அரசு டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு வருடந்தோறும் ரி.ம. 1,000.00 வழங்குகிறது. கோல சிலாங்கூரில் உயர்கல்வி படிக்கும் மாணவர்கள் இத் திட்டத்தில் பயனடைய தமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும் படி கேட்டுக் கொண்டார்.


இலவச மடிக்கணினி கொடுக்கும் இந் நிகழ்ச்சி கோல சிலாங்கூர் பி.கே.ஆர் அலுவலகத்தில் நடைபெற்றது.

# சட்டபூர்வமற்ற தொழிற்சாலைக்கு
## எதிராக நடவடிக்கை

**கோல சிலாங்கூர்-**
பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின்படி சட்டபூர்வமற்ற எந்த ஒரு தொழிற்சாலைக்கு எதிராக நகராண்மைக் கழகம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்(பிபிடி) அமலாக்க நடவடிக்கை எடுக்கலாம்.

TNB போன்ற தொடர்புடைய நிறுவனங்களுடன் கூட்டு நடவடிக்கைகளில் தண்ணீர் மற்றும் மின்சார விநியோகத் தடை செய்வதும் அதில் அடங்கும் என்று உள்ளூர் அரசு ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ இங் சுய் லிம் கூறினார்.

மாநிலங்களவை கூட்டத்தொடரில் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குத் தொழிற்சாலைகள் இணங்க உறுதி செய்வதற்கான அரசின் முயற்சிகள் குறித்து செமெந்தா சட்டமன்ற உறுப்பினர் நோர் நஜன் முகமட் சலே இன் கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.



# நில உரிமையை வழங்க சிறப்புக் குழு ஏற்பாடு

**சபாக் பெர்ணம்-**
வீட்டு வசதி மற்றும் நில உரிமையை அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வழங்குவதற்காக மாநில அரசு சிறப்புக்குழுவை அமைத்துள்ளது என்று வீடமைப்பு ஆட்சிக்குழு உறுப்பினர் போர்ஹான் அமான் ஷா தெரிவித்தார்.

"சிலாங்கூர் வீட்டுவசதி மற்றும் சொத்து வாரியத்தின் (LPHS) பதிவேடுகளைக் குறிப்பிடுகையில், சில அடுக்குமாடி குடியிருப்புகள் நீண்ட காலமாக ஆக்கிரமிக்கப் பட்டிருந்தாலும் இன்னும் அதற்கான உரிமையைப் பெறவில்லை.

"இந்தப் பிரச்சனை அடுக்குமாடி உரிமையாளர்கள் எந்தப் பரிவர்த்தனையும் மேற்கொள்வதற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், சிக்கலைத் தீர்க்க மாநில அரசு ஒரு சிறப்பு குழுவை அமைத்துள்ளது," என்று அவர் கூறினார்.

சிலாங்கூர் மாநில சட்டசபையில், சிலாங்கூர் சுல்தான் ஷரபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் ஆற்றிய உரையின் நிறைவு அமர்வின் போது அவர் இவ்வாறு கூறினார்.

முன்னதாக, 2024 பட்ஜெட்டில் 1.5 மில்லியன் நில உரிமைகள் மற்றும் 800,000 அடுக்குமாடி குடியிருப்பு உரிமைகளுடன் அதிக சொத்து உரிமைகள் கொண்ட மாநிலமாகச் சிலாங்கூர் திகழ்கிறது என டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தெரிவித்தார்.

# தென் சிலாங்கூர் மேம்பாட்டுத் திட்டம் ஓரிரு மாதங்களில் தயாராகும்



**ஷா ஆலம்-**
தென் சிலாங்கூர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுப் பகுதிக்கான (இட்ரிஸ்) புளூபிரிண்ட் எனப்படும் கட்டமைப்பு பெருந்திட்டத்தை தயாரிக்கும் பணி இறுதிக்கட்டத்தில் உள்ளதாக வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸி ஹான் கூறினார்.

சாலைகள், மின்சாரம், பைபர் ஆப்டிக் எனப்படும் நார்இழை மற்றும் குடிநீர் குழாய் ஆகிய அடிப்படை வசதிகளை பதிக்கும் இடங்கள் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை இந்த உத்தேச பெருந்திட்டம் உள்ளடக்கியிருக்கும் என்று அவர் சொன்னார்.

எதிர்காலத்தில் அப்பகுதியில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் போது சம்பந்தப்பட்ட துறைகளுக்கு இந்த பெருந்திட்டம் ஒரு வழிகாட்டியாக விளங்கும் என்று மாநில சட்டமன்றத்தில் அவர் தெரிவித்தார்.

இந்த உத்தேச இட்ரிஸ் திட்டத்தினால் உள்ளூர் மக்களுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து சிஜங்காங் தொகுதி உறுப்பினர் டத்தோ டாக்டர் யூனுஸ் ஹைரி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொது மக்களுடன் கலந்துரையாடல் நடத்துவது முக்கியமனதாகும் எனக் கூறிய இங், இட்ரிஸ் திட்டம் தொடர்பான விழிப்புணர்வையும் அதன் தாக்கங்களையும் பொது மக்களுக்கு எடுத்துரைப்பதற்கு ஏதுவாக சந்திப்பு நிகழ்வுகளை நடத்துவதற்கான கடப்பாட்டை மாநில அரசு கொண்டுள்ளது என்று சொன்னார்.

தற்போது பல்வேறு சந்திப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக கோல லங்காட் மற்றும் சிப்பாங் மாவட்ட மக்களுக்குக் கேரித் தீவு மேம்பாட்டு பெருந்திட்ட தயார் நிலை மற்றும் இட்ரிஸ் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பில் விளக்கமளிப்பு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.



# 60,843 சிலாங்கூர் கூ வீடுகள் நிர்மாணிப்பு

**ஷா ஆலம்-**
இவ்வாண்டு ஜனவரி 31ஆம் தேதி வரை 60,843 வீடுகளை உள்ளடக்கிய ரூமா சிலாங்கூர் கூ திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளதாக மாநில சட்டமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

அவற்றில் 37,008 வீடுகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைக்-கப்பட்டதாக வீடமைப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் பொர்ஹான் அமான் ஷா கூறினார்.

எதிர்வரும் 2029ஆம் ஆண்டுக்குள் 200,000 சிலாங்கூர் கூ வீடுகளை நிர்மாணிக்கும் இலக்கை அடைய முடியும் என நம்புகிறோம். காரணம் கடந்த ஜனவரி வரை 60,000க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு விட்டது என்று அவர் சொன்னார்.

மாநில சட்டமன்றத்தில் இன்று புக்கிட் காசிங் உறுப்பினர் ராஜிவ் ரிக்சியாகாரான் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். 200,000 சிலாங்கூர் கூ வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்ற மாநில அரசின் தேர்தல் வாக்குறுதியின் நிலை குறித்து அவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

மாநிலத்திலுள்ள அனைத்து மக்களும் வசதியான மற்றும் பாதுகாப்பான குடியிருப்பை பெறுவதை உறுதி செய்வதற்காகக் கட்டுபடி விலை வீடமைப்புக் கொள்கையை மாநில அரசு அமல்-படுத்தியுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி முன்னதாக கூறியிருந்தார்.



# சிஜாங்காங் விவசாயப் பொருள் ஏல மையம்

**ஷா ஆலம்-**
கோலா லங்காட், சிஜாங்காங்கில் விவசாய பொருட்களுக்கான ஏல சந்தை மையத்தை வரும் மே மாதத்திற்குள் மாநில அரசு திறக்கும்.

வேளாண்மை எக்ஸ் கோ ஆர் இஷாம் ஹாஷிம் கூறுகையில், இரண்டு ஏக்கர் பரப்பளவில் பல்வேறு பயிர்களை சேகரிக்கும் மையம் தற்போது புதுப்பிக்கும் பணியில் உள்ளது.

"நாங்கள் கொரியா மற்றும் ஜப்பானுக்குச் சென்று வந்த பின் இம்முயற்சியால் ஈர்க்கப் பட்டதாக கூறிய அவர். அங்கே வணிகர்கள் உட்பட அனைத்து நுகர்வோரும் வாங்கக்கூடிய அனைத்து பயிர்களையும் ஒரே மையத்தில் சேகரிக்கின்றனர்.

"நாங்களும் விவசாயிகள் உற்பத்தி செய்வது, சந்தையில் விநியோக மின்றி இடைநிறுத்தப் படுவதை காண விரும்பவில்லை. இந்த மையம் மூலம், விவசாயிகள் நுகர்வோருக்கு விற்பனை செய்ய பயிர்களை தொடர்ந்து கொண்டு வருவார்கள்," என்றார்.

முன்னதாக இர் இஷாம் இங்குள்ள விஸ்மா கோப்ராசி வர்கா ஹிஜ்ரா சிலாங்கூர் பெர்ஹாட்டில் (கோஹிஜ்ரா) கோத்தா ராஜா சமூக விவசாயத் திருவிழாவை நடத்தினார்.

# ஜெலாஜா ஜாப்கேர் மூலம் 35,000 வேலை வாய்ப்புகள்




**ஷா ஆலம்-**

கடந்த ஆண்டு ஜெலாஜா ஜாப்கேர் மூலம் சிலாங்கூர் மக்களுக்குச் சுமார் 35,000 வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளதாக மனித வளம் மற்றும் வறுமை ஒழிப்பு மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வி பாப்பாராய்டு தெரிவித்தார்.

முதலாளிகள் வழங்கும் பல்வேறு துறைகளில் இருந்து பொருத்தமான வேலைகளைப் பெற பொதுமக்களுக்கு இத்திட்டம் உதவுகிறது என்று வி.பாப்பாராய்டு கூறினார்.

" ஒவ்வொரு மாவட்டத்திலும் சமூக நல அமைப்பு (சொக்சோ) மற்றும் சிலாங்கூர் ஊழியர் பிரிவு ஆகியவற்றின் உதவியுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப் பட்டது.

"வேலை காலியிடங்கள் நிரப்புவதன் மூலம் வேலை தேடுபவர்கள் தங்கள் திறனை ஆராய்வதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர்" என்று அவர் கூறினார்.

தேசிய தொழிலாளர் சந்தையில் திறமையான, உற்பத்தி திறன், மற்றும் செயல்திறன் மிக்க தொழிலாளர்களை உருவாக்க மனிதவள நிலைக்குழுவின் பங்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்றார் பாப்பா ராய்டு.

"இந்த திட்டம் சிலாங்கூர் மக்களின், குறிப்பாக முதியவர்கள், ஒற்றைத் தாய்மார்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முன்னாள் குற்றவாளிகள் என பாதிக்கப்படக்கூடிய நபர்களின் வேலைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதோடு, வேலையின் தரம் மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்தும்" என்று அவர் கூறினார்.

# டிஜிட்டல் மாற்றம் மாநிலத்தில் புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும்

**ஷா ஆலம்-**

5ஜி கவரேஜ் மூலம் ஏற்படும் டிஜிட்டல் மாற்றம் 2030ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தில் 750,000 புதிய வேலை வாய்ப்புகளை உருவாகும் என்று புதுமை கலாச்சாரம் ஆட்சிக்குழு உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

மேலும், 2030 ஆம் ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) ஏறத்தாழ RM150 பில்லியனை அதிகரிக்க முடியும் என்று சிலாங்கூர் மாநில சட்டசபையின் அமர்வில் டாக்டர் ஃபஹ்மி நகா கூறினார்.

"5ஜி நெட்வொர்க்கை செயல்படுத்துவது மாநில அரசின் கொள்கைகளை வெளிப்படுத்தும் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

"முதல் சிலாங்கூர் திட்டத்தின் (RS-1) கட்டமைப்பில் உள்ளபடி, தெற்கு சிலாங்கூர் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பகுதி திட்டம் (IDRISS) மற்றும் சபாக் பெர்ணம் மேம்பாட்டுப் பகுதி (சாப்டா) ஆகியவற்றின்எண்ணத்தைஅடைவதில் இதுவும் இணைக்கப்பட்டுள்ளது.

சிலாங்கூரில் 5G நெட்வொர்க் எவ்வாறு வளர்ச்சிக்கு உதவுகிறது என்று ரவாங் சட்டமன்ற உறுப்பினர் சுவா வெய் கியாட்டின் கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

டிசம்பர் 31 வரை, சிலாங்கூரில் மக்கள் வசிக்கும் பகுதிகளில் 5G கவரேஜ் சதவீதம் 95.9 சதவீதத்தை எட்டியுள்ளது என ஃபஹ்மி தெரிவித்தார்.

இதற்கிடையில், புக்கிட் மெலாவதியின் சட்டமன்ற உறுப்பினர் டத்தோ நூராஸ்லி யாஹ்யாவின் கேள்விக்குப் பதிலளித்த ஃபஹ்மி,

2023 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு வரை, கோலா சிலாங்கூர் நாடாளுமன்றத்தில் உள்ள மக்கள் வசிக்கும் பகுதியில் இணைய கவரேஜ் விகிதம் 99.95 சதவீதம் ஆக உள்ளது என்றார்.

# சிலாங்கூரில் விவாகரத்தின் எண்ணிக்கை உயர்வு

**ஷா ஆலம்-**

சிலாங்கூரில் விவாகரத்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வருமானத்தைக் காட்டிலும் வாழ்க்கைச் செலவினம் அதிகமாக இருப்பது முக்கிய காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

வருமானம் போதாத காரணத்தால் மாநில மக்கள் பகுதி நேர வேலையைத் தேட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் குடும்பத்தினருடன் அதிக நேரத்தைச் செலவழிக்க முடியாத நிலை ஏற்பட்டு குடும்ப உறவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று சமய விவகாரங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் ஃபஹ்மி ங்கா கூறினார்.

சிலாங்கூரில் குடியேறும் உள்நாட்டினர் மற்றும் வெளிநாட்டினரின் எண்ணிக்கை அதிகரிப்பும் இந்த குடும்பவியல் பிரச்சனையுடன் தொடர்புடையதாக உள்ளதாக கூறிய அவர், இதற்குத் தீர்வு காணும் பொறுப்பு சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள ஷரியா நீதிமன்றங்கள் வசம் உள்ளன என்றார்.

சிலாங்கூர் ஷரியா நீதித்துறை மற்றும் சமூக ஊடகங்கள் உள்பட பல்வேறு துறைகளின் ஏற்பாட்டில் நடத்தப்படும் சட்ட கல்வித் திட்டமும் மண முறிவு பிரச்சனைகளுக்குக் காரணமாக உள்ளன என அவர் சொன்னார்.

இந்த கல்வியின் காரணமாக மக்கள் திருமண உறவில் தங்களுக்கு உள்ள உரிமைகளை அறிந்து கொள்கின்றனர் என்று மாநில சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது அவர் கூறினார்.

மாநிலத்தின் துரித வளர்ச்சியும் குடும்ப உறவில் விரிசல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக விளங்குகிறது என்றும் அவர் சொன்னார்.




# செயற்கை நுண்ணறிவு பயிற்சிகளை அதிக அளவில் நடத்த வேண்டும்

**ஷா ஆலம்-**

இளம்தலைமுறையினருக்கு சந்தை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்கு ஏதுவாக செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) பயிற்சிகளை மாநில அரசு அதிகளவில் நடத்த வேண்டும் என்று புக்கிட் லஞ்சான் தொகுதி உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த செயற்கை நுண்ணறிவு படைப்பாற்றல் துறை ஆய்வக ஆராய்ச்சி, படைப்பாற்றல் முன்முயற்சி மற்றும் புத்தாக்க உந்து சக்தி திட்டம் உள்ளிட்ட துறைகளின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றும் திறனைக் கொண்டுள்ளதாக புவா பெய் லிங் கூறினார்.

உலகம் தற்போது இலக்கவியலை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நமது பிள்ளைகளும் இலக்கவியல் துறையிலும் தொழில் திறன் மற்றும் தொழில்நுட்ப கல்வியிலும் (திவேட்) ஆற்றலை வளர்த்துக் கொள்வதிலிருந்து பின்தங்கி விடாமலிருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இளம்தலைமுறையினருக்கு தொழில் கல்வி வழங்குவதற்கு ஏதுவாக சிலாங்கூர் மாநிலமும் சொந்த திவேட் திட்டத்தை அதாவது சிலாங்கூர் தொழில்திறன் மேம்பாட்டு மையத்தை (எஸ்.டி.டி.சி.) கொண்டிருப்பது குறித்து மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் பாராட்டு தெரிவித்ததையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்று அவர் சொன்னார்.

சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தில் மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தானின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது புவா இவ்வாறு தெரிவித்தார்.

மாநில மக்கள் அரசாங்கச் சேவைகளைப் பெறுவதற்கு ஏதுவாக வார இறுதி நாட்களில் நடமாடும் முகப்பிடச் சேவைகளை மாநில அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பொது மக்களின் தேவையை ஈடு செய்வதற்கு ஏதுவாக மக்கள் அதிகம் ஒன்று கூடும் பகுதிகளில் இத்தகைய நடமாடும் முகப்பிடச் சேவை மையங்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# மாநிலனத்தின் சக்திமிக்க ஆட்சி மன்றத்தில் இந்தியர்கள்

## கோல லங்காட்

கோல லங்காட் நகராண்மைக் கழகத்தின் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான புதிய நகராண்மைக் கழக உறுப்பினர்கள் பதவி உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் நிகழ்வில் மொத்தம் 17 பேர் நகராண்மைக் கழக தலைவர் டத்தோ அமிருள் அஜிசான் முன்னிலையில் பதவி உறுதிமொழி மற்றும் இரகசிய காப்பு பிரமாணம் எடுத்துக் கொண்டனர். அவர்களில் நால்வர் இந்தியர்களாவர்.

மொத்தம் 24 உறுப்பினர்கள் கொண்ட நகராண்மைக் கழகத்தில் நேற்று 17 பேர் மட்டுமே பதவியேற்றனர். அம்னோ மற்றும் அமானா கட்சிகளைச் சேரந்த எஞ்சிய பிரதிநிதிகள் பின்னர் பதவியேற்பர்.

இந்தியர்களை பிரதிநிதித்து பன்னீர் செல்வம் குப்பன் , நடேசன் சுப்பிரமணியம், கமலநாதன் செல்லப்பன் மற்றும் திருமதி உஷா




நந்தினி ஞானப்பிரகாசம் ஆகியோர் நகராண்மைக் கழகத்தில் இடம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோல லங்காட் நகராண்மைக் கழகத்தில் கடந்த தவணை யின் போது ஐந்து பேராக இருந்த இந்தியப் பிரதிநிதிகள் எண்ணிக்கை இம்முறை நான்காக குறைந்துள்ளது.

இந்த தவணையில் அம்னோவுக்கு இரு இடங்கள் ஒதுக்கப்பட்ட வேளையில் முன்னாள் நகராண்மை கழக உறுப்பினரான ஹரிதாஸ் ராமசாமி கோல லங்காட் தொகுதி ஒருங்கிணைப்பாளராக பதவியேற்க விரும்புவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக இங்கு நீடித்து வரும் மின்சுடலை மற்றும் ஈமச்சடங்கு செய்யும் இடம் உள்ளிட்டப் பிரச்சினைகளுக்கு புதிதாக நியமனம் பெற்ற நகராண்மைக் கழக உறுப்பினர்களின் ஒத்துழைப்பின் வாயிலாக தீர்வு காணப்படும் என்று எதிர்பாக்கப்படுகிறது.

## சிப்பாங்

மூன்று இந்தியர்கள் உள்பட 23 பேர் சிப்பாங் நகராண்மைக் கழக உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய தவணைக்கான உறுப்பினர்களின் பதவியேற்பு சடங்கு கடந்த சனிக்கிழமை நகராண்மைக் கழகத் தலைமையகத்தில் நகராண்மைக் கழகத் தலைவர் டத்தோ அப்துல் ஹமிட் ஹூசேன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நியமனத்தில் விஜயராணி த/பெ ஆறுமுகம், சிவக்குமார் த/பெ பெரியசாமி மற்றும் சுகுமாறன் த/பெ கிருஷ்ணன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் விஜயராணி மற்றும் சிவக்குமார் ஆகியோர் ஜசெக சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வேளையில் சுகுமாறன் பி.கே.ஆர். கட்சியைப் பிரதி நிதிக்கிறார்.




## செலாயாங்

செலாயாங் நகராண்மை கழக உறுப்பினர்கள் அதன் தலைவர் டத்தோ முகமட் யாசிட் பின் சாரி முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். இம்முறை இந்தியர்கள் நால்வர் மீண்டும் செலாயாங் நகராண்மை கழக உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் நீதிக் கட்சியின் சார்பில் இருவரும், ஜ.செ.க மற்றும் அமனா கட்சிகளின் சார்பில் தலா ஒருவரும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இந் நால்வரில் மூவர் ஆண்கள் ஒருவர் மகளிர் ஆவார்.

மக்கள் நீதிக் கட்சியின் சார்பில் துவான் தேவந்திரன் மற்றும் துவான் ஏண்டி என்ற அன்முனியாண்டி நியமிக்கப்பட்டுள்ளனர். அமனா கட்சியின் சார்பில் துவான் பாலா என்ற தனபால் நியமிக்கப் பட்டுள்ளார். ஜ.செ.க.வின் சார்பில் புவான் மாரியம்மாள் நியமிக்கப் பட்டுள்ளார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இந்த நால்வரும் செலாயாங் நகராண்மை கழகத்தில் உறுப்பினர்களாக சேவையாற்றுவார்கள். தங்களது பகுதிகளில் உள்ள நகராண்மை கழக பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வேளையில் அங்குள்ள இந்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பார்கள்.



## கிள்ளான்

கிள்ளான் மாநகர்மன்ற உறுப்பினர்கள் டிப்ளோமாவுக்கு மேற்பட்ட கல்வித் தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்கிள்ளான் அரச மாநகர் மன்ற உறுப்பினர்களாக (எம்.பி.டி.கே.) இனி நியமிக்கப் படுவோர் டிப்ளோமா அல்லது அதற்கும் மேற்பட்ட கல்வித் தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்.

மாநகர் மன்ற உறுப்பினர்களாக நியமிக்கப் படுவோர் அரசியல்வாதிகளாக மட்டுமின்றி வல்லுநர்களாகவும் இருக்க வேண்டும் என்ற மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தானின் உத்தரவுக்கேற்ப இந்த நிபந்தனை விதிக்கப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

மாநகர் மன்றத்தில் காலியாக உள்ள இடங்கள் விரைவில் நிரப்பப்படும். மாநகர் மன்றத்தில் குறைந்தபட்சம் 50 விழுக்காடு வல்லுநர்கள் இருக்க வேண்டும் என்ற துவாங்குவின் (சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ்) பரிந்துரையை நிறைவு செய்ய முயல்கிறோம் என்றார் அவர்.

## சபாக்பெர்ணம்

சபாக் பெர்ணம் மாவட்ட மன்ற உறுப்பினர்களாக 23 பேர் பதவியேற்றுக் கொண்டனர். 2024/2025 ஆம் ஆண்டிற்கான இந்த நியமனத்தில் இந்திய சமூகம் சார்பில் புஷ்பா ராஜன் மற்றும் சதாசிவம் மனோகர் ஆகிய இருவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. புஷ்பா அமானா கட்சியைப் பிரதிநிதிக்கும் வேளையில் பி.கே.ஆர். கட்சி சார்பில் சதாசிவம் பொறுப்பேற்றுள்ளார்.

## சுபாங் ஜெயா

சுபாங் ஜெயா வில் ஏழு இந்தியர்கள் உட்பட 23 கவுன்சிலர்கள் பதவியேற்பு- சுபாங் ஜெயா மாநகர் மன்றத்தில் நடைபெற்றது. இந்த நியமனத்தில் ஐந்து பெண்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள எம்.பி.எஸ்.ஜே. தலைமையகத்தில் நடைபெற்ற பதவியேற்பு சடங்கில் அனைத்து 23 உறுப்பினர்களும் சுபாங் ஜெயா டத்தோ பண்டார் டத்தோ முகமது பவுசி முகமது யாத்திம் முன்னிலையில் பதவி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

புதிதாக நியமனம் பெற்ற மாநகர் மன்ற உறுப்பினர்களில் பாலச்சந்தர் நாய்க்கர் (ஜசெக), கே. குணசுந்தரி (பி.கே.ஆர்.), எம்.பிரவின் (பி.கே.ஆர்.), இ.மேகநாதன் (ஜசெக), ஆர்.பரிதிவாணன் (பி.கே.ஆர்.) எம்.அன்பரசன் (பி.கே.ஆர்.) எஸ். தமிழரசு (ஜசெக) ஆகியோர் இந்தியப் பிரதிநிதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பதவியேற்பு நிகழ்வில் உரையாற்றிய முகமது பவுசி, புதிய தவணைக்கு நியமிக்கப்பட்ட மாநகர்மன்ற உறுப்பினர்கள் சிறப்பான சேவையை வழங்கும் அதேவேளையில் மக்கள் முன்வைக்கும் பிரச்சனைகளுக்கு விரைவாக தீர்வு காணவும் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

சிறந்த மற்றும் மக்களால் மதிக்கக்கூடிய ஊராட்சி மன்றமாக விளங்கும் வகையில் மாநகர்மன்ற உறுப்பினர்கள் ஊழியர்கள் மக்களின் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுப்பதில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

# 20 லட்சம் சுற்றுப் பயணிகளை ஈர்க்க டூரிசம் சிலாங்கூர் இலக்கு

**ஷா ஆலம்-**
அடுத்தாண்டு அனுசரிக்கப்பட விருக்கும் சிலாங்கூருக்கு வருகை தாருங்கள் ஆண்டை முன்னிட்டு இருபது லட்சம் அனைத்துலகச் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் டூரிசம் சிலாங்கூர் ஆர்வம் கொண்டுள்ளது என்று அதன் தலைமை நிர்வாக அதிகாரி கூறினார்.

குடும்பத்துடன் அல்லது வணிக நோக்கங்களுக்காக வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து சிலாங்கூர் வரும் சுற்றுப்பயணிகள் பொதுவாக எட்டு முதல் ஒன்பது நாட்கள் வரை இங்கு தங்கியிருப்பார்கள் என்று அஸ்ருள் ஷா முகமது கூறினார்.

கோல லங்காட்டில் உள்ள மா மேரி கலாச்சாரம், கோல சிலாங்கூரில் கம்போங் குவாந்தான் மின்மினிப் பூச்சிகள் சரணாலயம், விங்ஸ் ஆஃப் கோல குபு பாரு மற்றும் உலு சிலாங்கூரில் மலை சைக்கிள் தடம் போன்றவை அவர்களைக் கவரும் சுற்றுலாத் தலங்களாகவும் என அவர் சொன்னார்.

இந்த சுற்றுலா ஈர்ப்பு நடவடிக்கையில் சூழியல் சுற்றுலா, காஸ்ட்ரோனமி (உணவு சுற்றுலா), தீம் பார்க் எனப்படும் பொழுது போக்கு பூங்காக்கள், கடற்கரைகள் மற்றும் ஓய்வு விடுதிகளின் பிரிவில் கவனம் செலுத்தப்படுகிறது என்று அவர் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

கடந்த 2022 ஆம் ஆண்டில் மொத்தம் 94,264 ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகள் சிலாங்கூருக்கு வருகை தந்துள்ளனர். அவர்களில் 20,639 பேர் இங்கிலாந்தையும் 10,819 பேர் ஜெர்மனியையும் சேர்ந்தவர்களாவர் என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், கடந்த மார்ச் 3 முதல் 8 வரை பெர்லினில் நடைபெற்ற உலகின் மிகப்பெரிய சுற்றுலா கண்காட்சியான இண்டர்நேஷனல் டூரியஸ் போர்ஸ்ஸில் டூரிசம் சிலாங்கூரும் பங்கேற்றதாக அஸ்ருல் தெரிவித்தார்.

ஆறாவது முறையாக நடைபெற்ற இந்நிகழ்வில் பங்கேற்றதன் வழி செக் குடியரசு, எஸ்டோனியா மற்றும் டிஸ்கோவா மற்றும் உலகளாவிய பயண நிறுவனத்துடன் இருதரப்பு ஒத்துழைப்பை மேற்கொள்வதற்கு வழிவகுத்தது என்றார் அவர்.







# குடியிருப்பாளர்களின் வசதிக்காக நடைபாதைகள் கட்டப்படும்

**பெட்டாலிங் ஜெயா-**
ஸ்ரீ செத்தியா தொகுதியில் குடியிருப்பாளர்களின் வசதிக்காக மேற்கூரைகள் கொண்ட நடைபாதைகள் கட்டப்படும்.

க்ளென்மேரி எல்ஆர்டி நிலையம் மற்றும் பாரடிக்ம் ஷாப்பிங் சென்டரைச் சுற்றி அதிக நடைபாதைகளை உருவாக்குவது இதில் அடங்கும் என்று சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஃபஹ்மி நகா கூறினார்.

"இந்த திட்டம் பற்றி பெட்டாலிங் ஜெயா மேயருடன் நான் விவாதிப்பேன், ஏனெனில், இத்திட்டம் குடியிருப்பாளர்களுக்கு வசதியாக இருக்கும்.

"மேலும், பாதுகாப்புக் காரணிகளை கருத்தில் கொண்டு நடைபாதைகளில் தெரு விளக்குகளும் பொருத்தப்படும்," என்று அவர் நேற்று கிளானா மாலில் உள்ள ஸ்ரீ செத்தியா தொகுதி அளவில் சீன புத்தாண்டு திறந்த இல்ல உபசரிப்பின் போது கூறினார். அந்நிகழ்வில், டாக்டர் ஃபஹ்மி கலந்து கொண்டு சிறப்பித்தார். அவர் வயதானவர்களுக்கும் குழந்தைகளுக்கும் அங் பாவ் வழங்கினார்.

# பொது இடங்களில் கால்நடைகள்

## சுற்றித் திரியும் விவகாரம் – அபராதத் தொகை அதிகரிப்பு

**ஷா ஆலம்-**
பண்ணைக்கு வெளியே தங்கள் கால்நடைகளைச் சுற்றித் திரியவிடும் கால்நடை வளர்ப்போருக்கு விதிக்கப்படும் அபராதம் பத்து மடங்காக அதிகரிக்கப்படும்.

இத்தகைய குற்றங்களைப் புரிவோருக்கு தற்போது விதிக்கப்படும் 1,000 வெள்ளி கூடுதல் பட்ச அபராதத் தொகையை 5,000 வெள்ளி முதல் 10,000 வெள்ளி வரை உயர்த்துவதற்கு ஏதுவாக 1971ஆம் ஆண்டு மாநில கால்நடை கட்டுப்பாட்டுச் சட்டத்தில் திருத்தம் செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ இங் சுயி லிம் கூறினார்.

விவசாயப் பகுதிகளுக்கு அப்பால் கால்நடைகள் சுற்றித் திரிவதை தடுப்பதில் இந்த உயர்ந்த பட்ச அபராதத் தொகை சிறந்த அணுகுமுறையாக விளங்கும் என்று அவர் சொன்னார்.

பொது வெளிகளில் சுற்றித் திரியும் கால்நடைகள் சாலைகளில் நுழைந்து விபத்துகள் ஏற்படுவதற்கு காரணமாகி விடுகின்றன. ஆகவே இந்த விவகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என கருதுகிறேன் என்று மாநில சட்டமன்றத்தில் அவர் தெரிவித்தார்.

பொது இடங்களில் சுற்றித் திரியும் கால்நடைகளின் உரிமையாளர்களை அடையாளம் காண அதிகாரிகள் முயலும் போது அந்த கால்நடைகளுக்கு உரிமை கோரி யாரும் முன்வருவதில்லை. இதனால் அமலாக்க நடவடிக்கைகளில் சிக்கல் ஏற்படுகிறது என்றார் அவர்.

இவ்விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்துவதிலும் நடப்பு சட்டங்களை அமல்படுத்துவதிலும் ஊராட்சி மன்ற அதிகாரிகள் சிக்கல்களை எதிர்நோக்குவதைச் சுட்டிக்காட்டிய இங், எனினும் இத்தகைய குற்றங்களுக்கு 10,000 வெள்ளி வரை அபராதம் விதிப்பதற்கு ஏதுவாக நடப்பு சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சாத்தியங்களை மாநில அரசு ஆராயும் என்றார்.

# உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த RM212 மில்லியன் ஒதுக்கீடு

**ஷா ஆலம்-**
உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும், கிள்ளான் நகரை அழகுபடுத்தவும் கிள்ளான் மாநகராட்சி மொத்தம் RM212 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

இந்த செலவில் சுற்றுச்சூழல் தூய்மை மற்றும் பொது சுகாதாரத்திற்கு RM91.914 மில்லியன் மற்றும் வடிகால் பராமரிப்பிற்கு RM24.957 மில்லியன் ஆகியவை அடங்கும் என்று மேயர் டத்தின் படுகா நோராயினி ரோஸ்லான் தெரிவித்தார்.

"மேலும், சாலை பராமரிப்பிற்கு RM 67.250 மில்லியன், பூங்காக்கள், நிலப்பரப்பு அழகுபடுத்துதல் மற்றும் பராமரிப்பிற்கு RM28.056 மில்லியன் ஒதுக்கப் பட்டது," என்று அவர் எம்பிடிகேயின் முழு கூட்டத்தில் கூறினார்.

கிள்ளானை அரச பாரம்பரிய நகரமாகவும், உலகளவில் போட்டித் துறைமுகமாகவும் மேம்படுத்தும் நோக்கில் எம்பிடிகே முழுமையான மற்றும் நிலையான வளர்ச்சியை வலியுறுத்தும் என்று நோராயினி கூறினார்.

மேலும், பிப்ரவரி 7 அன்று நடந்த 2023 குறைந்த கார்பன் நகரம் விருது வழங்கும் விழாவில் பார்ட்னர் பிரிவில் டைமண்ட் அங்கீகார விருதை வென்ற எம்பிடிகே அவர் வாழ்த்தினார்.

இந்த டைமண்ட் அங்கீகார விருது பெற்ற 16 தரப்பினருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

# இளைஞர்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்த மாநில அரசு திட்டம்



**ஷா ஆலம்-** இளைஞர்கள் நேரத்தை பயனுள்ள வழிகளில் செலவிடுவதை உறுதி செய்வதற்கும் அவர்கள் மத்தியில் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் ஏதுவாக சிலாங்கூர் அரசினால் உருவாக்கப்பட்ட 2020 சிலாங்கூர் இளைஞர் கொள்கை (டி.பி.எஸ்.) ராக்கான் மூடா திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

தலைமைத்துவம், அரசியல் கல்வி, ராக்கான் டேமோகிராசி, ராக்கான் மாஹிர் மற்றும் ராக்கான் பூமி ஆகியவற்றோடு சுற்றுச்சூழல் சமநிலை ஆகியவற்றையும் இந்த திட்டம் உள்ளடக்கியிருக்கும் என்று இளைஞர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் கூறினார்.

பதினைந்து முதல் 30 வயது வரையிலான இளையோர் பயனடைவதற்கு ஏதுவாக பத்து வாழ்க்கை முறைகளை உள்ளடக்கிய இத்திட்டங்களை சிலாங்கூர் இளைஞர் இயக்கம் மேற்கொள்ளும் என்று நஜ்வான் ஹலிமி தெரிவித்தார்.

கடந்த 1994ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ராக்கான் மூடா திட்டம் மக்கள் மத்தியில் பிரசித்தி பெற்று விளங்குகிறது. இந்த திட்டத்தை சிலாங்கூரில் பிரபலப்படுத்துவதற்கு ஏதுவாக 2020 டி.பி. எஸ்.சை இலக்காக கொண்ட பகுதிகளில் சிலாங்கூர் இளைஞர் இயக்கத் திட்டங்களை அமல்படுத்தலாம் என்றார் அவர்.

மலேசியா மடாணி மற்றும் கித்தா சிலாங்கூர் கோட்பாடுகளை ஒருங்ணைப்பதன் மூலம் சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றங்கள் மற்றும் மாநில அரசு துறைகளை ஒன்றுபடுத்த முடியும் என்று மாநில சட்டமன்றத்தில் அவர சொன்னார்.

சிலாங்கூர் இளைஞர் கொள்கை கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் தேதி மாநில சட்டமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இளைஞர்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களின் இலக்கை நிர்ணயிக்கக் கூடிய வழிகாட்டியாக இந்த கொள்கை விளங்குகிறது.




# ஆண்டுக்கு RM200 மில்லியன் வரை வருவாய் ஈட்ட முடியும்

**ஷா ஆலம்-** பெங்குருசன் ஆயர் சிலாங்கூர் அதன் செயல்பாட்டுத் திட்டத்தை மறுசீரமைப்பு செய்த பின் ஆண்டுக்கு RM200 மில்லியன் வரை வருவாய் ஈட்ட முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தண்ணீர் கட்டணம் உயர்வு, பழைய குழாய் மாற்றுத் திட்டத்தின் வழி கடனில் இருந்து மீண்டும் லாபம் ஈட்டுவது போன்றவைகள் அடங்கும் என்றார் டத்தோ மந்திரி புசார் கூறினார்.

“மேலும், முன்மொழியப்பட்ட கட்டண அதிகரிப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவது உட்பட திட்டமிடல் நடவடிக்கை மறுசீரமைப்புக்கு பிறகு, அந்நிறுவனம் ஆண்டுக்கு RM200 மில்லியன் வரை வருமானம் ஈட்ட முடியும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

“உலு கிளாங் (டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலி) மந்திரி புசாராக இருந்தபோது ஏற்பட்ட அனைத்து கடன் மற்றும் மேம்பாடு செலவுகளும் 2031 ஆம் ஆண்டு முதல் ஆயர் சிலாங்கூர் மற்றும் பெங்குருசான் அசெட் ஆயர் பெர்ஹாட் ஆகியவையால் கான்ட்ராஸ்ட் மூலம் (RM55 மில்லியன்) திருப்பிச் செலுத்தப்படும்.

ஆண்டுக்கு 150 கிலோ மீட்டரிலிருந்து சமீபத்தில், ஆண்டுக்கு 300 கிலோ மீட்டராக தண்ணீர் குழாய்களை மாற்றுவதாகவும், தொடர்ந்து 2034 முதல் ஆண்டுக்கு 400 கிலோ மீட்டராகவும் உயர்த்தப் போவதாக ஆயர் சிலாங்கூர் நிறுவனம் அறிவித்துள்ளது.

பிப்ரவரி 1 முதல் நடைமுறைக்கு வந்த புதிய தண்ணீர் கட்டண திட்டத்தை தொடர்ந்து இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.




# குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு அரிசி பேக்கட்டுகள் வழங்கப்படும்

**ஷா ஆலம்-** போர்ட் கிள்ளான் தொகுதியில் குறைந்த வருமானம் கொண்ட குடியிருப்பாளர்களுக்கு (B40) “MISHA cat food” நிறுவனம் 1,000 ஐந்து கிலோ அரிசி பேக்கட்டுகளை வழங்கியது.

வாழ்க்கைச் செலவு மற்றும் நிச்சயமற்ற பொருளாதார சூழ்நிலையை எதிர்கொள்வதில் மக்களின் சுமையைக் குறைக்க இந்த நன்கொடையை வழங்குவதாகச் சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிசாம் சமான் ஹூரி கூறினார்.

“இது பெரிதும் பாராட்டப்படும் முயற்சியாகும், ஏனென்றால் குடியிருப்பாளர்களுக்கு உண்மையில் இந்த உதவி தேவைப்படுகிறது. கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் நாங்கள் குடியிருப்பாளர்களிடமிருந்து உணவுக்கான கோரிக்கைகளைப் பெறுகிறோம்.

இதற்கிடையில், இந்த உதவி மக்களுக்குக் குறிப்பாக கோவிட்-19 தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என “MISHA” நிர்வாக இயக்குனர் டாக்டர் கோ போ ஹுஹாட் தெரிவித்தார்.

“மேலும், 2020 ஆம் ஆண்டில் தொற்றுநோய் பரவல் பொருளாதாரத்தின் மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே, மக்களின் சுமையைக் குறைக்க நாங்கள் உதவ முயற்சிக்கிறோம்,” என்று அவர் கூறினார்.

# கழிவை எரிசக்தியாக மாற்றும் ஆலைத் திட்டம்



**ஷா ஆலம்-** சுல்தான் இட்ரிஸ் ஷா பசுமை எரிசக்தி பூங்கா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கழிவை எரிசக்தியாக மாற்றும் (டபள்யூ.டி.இ.) ஆலை இன்னும் சுற்றுச்சூழல் துறையின் மதிப்பீட்டு கட்டத்தில் உள்ளது.

மதிப்பாய்வு, கண்காணிப்பு மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் விளைவு மீதான மதிப்பீடு (இ.ஐ.ஏ.) மற்றும் சமூக தாக்க மதிப்பீடு (எஸ்.ஐ.ஏ.) ஆகியவற்றை இத்திட்டம் உள்ளடக்கியிருக்கும் என்று ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ இங் சுயி லிம் கூறினார்.

பத்து ஆரங்கில் உள்ள கழிவு-எரிசக்தி ஆலையின் மேம்பாட்டிற்கான திட்டமிடல் பொறுப்பான தரப்பினரால் நிர்ணயிக்கப்பட்ட அனைத்துலக தரத்திற்கு ஏற்ப கவனமாக மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் சொன்னார்.

அதே சமயம், அந்த டபள்யூ.டி.இ. திட்டத்தை வெறும் ஆலையாக மட்டுமின்றி மாநில பசுமை ஆற்றல் பூங்காவாகவும் மாற்ற மாநில அரசு திட்டமிட்டுள்ளதாகவும் சுயி லிம் தெரிவித்தார்.

மறுசுழற்சி மையம், சோலார் பண்ணை, பசுமை மற்றும் நிலையான எரிசக்தி பற்றிய கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் தேசிய ஆற்றல் மாற்ற சாலை வரைபடத்திற்கு ஏற்ப பொது பொழுதுபோக்கு பூங்கா ஆகியவற்றையும் இத்திட்டம் உள்ளடக்கியிருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

சுல்தான் இட்ரிஸ் ஷா பசுமை பூங்கா திட்டத்தின் நான்கு கட்ட வளர்ச்சிக்கு 450 கோடி வெள்ளி செலவாகும் என மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி 2024 வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்யும் போது தெரிவித்தார்.

# மலேசியாவின் சர்வதேசக் கையிருப்பு உயர்வு
## 114.3 பில்லியன் யு.எஸ்.டி

**கோலாலம்பூர்-**

பிப்ரவரி 29, 2024 நிலவரப்படி பேங்க் நெகாரா மலேசியாவின் (பிஎன்எம்) சர்வதேச கையிருப்பு 114.3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.

இக்கையிருப்பு நிலை, 5.4 மாதங்கள் பொருட்கள் மற்றும் சேவைகளை இறக்குமதி செய்வதற்குப் போதுமானது என்றும் மொத்த குறுகிய கால வெளிநாட்டு கடனை விட 1.0 மடங்கு அதிகம் என்றும் மத்திய வங்கி கூறியது.

கையிருப்புகளின் முக்கிய கூறுகள் வெளிநாட்டு நாணய இருப்புக்கள் 101.8 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தன. அதைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதிய கையிருப்பு (US$1.4 பில்லியன்), சிறப்பு உரிமைகள் (SDRs) (US$5.8 பில்லியன்), தங்கம் (US$2.6 பில்லியன்) மற்றும் பிற இருப்பு சொத்துக்கள் (US$2.7 பில்லியன்) ஆகும்.

தங்கம், அந்நிய பரிமாற்றம் மற்றும் SDRகள் (RM524.44 பில்லியன்), மலேசிய அரசாங்க கடன் பத்திரங்கள் (RM13.0 பில்லியன்), நிதி நிறுவனங்களுடனான வைப்புத்தொகை (RM2.41 பில்லியன்), முன்பணம் (RM24.51 பில்லியன்), நிலம் மற்றும் கட்டிடங்கள் (RM4.13 பில்லியன்), மற்றும் பிற சொத்துக்கள் (RM60.68 பில்லியன்) கடன்கள் மற்றும் பிற இருப்புக்களை உள்ளடக்கிய மொத்த சொத்துக்கள் RM629.17 பில்லியன்களாக உள்ளன.

மேலும், மூலதனம் மற்றும் பொறுப்புகள் செலுத்தப்பட்ட மூலதனம் (RM100.0 மில்லியன்), இருப்புக்கள் (RM187.42 பில்லியன்), புழக்கத்தில் உள்ள நாணயம் (RM167.37 பில்லியன்), நிதி நிறுவனங்களின் வைப்புத்தொகை (RM169.44 பில்லியன்), மத்திய அரசு வைப்புக்கள் (RM4.24 பில்லியன்) மற்றும் பிற வைப்புத் தொகைகள் (RM39.65 பில்லியன்), பேங்க் நெகாரா ஆவணங்கள் (RM27.47 பில்லியன்), SDRகளின் ஒதுக்கீடு (RM29.74 பில்லியன்), மற்றும் பிற கடன்கள் (RM3.75 பில்லியன்) ஆகும் என பிஎன்எம் தெரிவித்தது.

# குடிநுழைவுத் துறை தடுப்புக்காவலில் அந்நியப் பிரஜைகள் துன்புறுத்தலா?

**ஷா ஆலம்-**

இந்நாட்டிலுள்ள குடிநுழைவுத் துறை முகாம்களில் அந்நிய நாட்டினர் துன்புறுத்தப்படுகின்றனர் அல்லது சாக விடப்படுகின்றனர் என்ற எச்.ஆர். டபள்யூ. என்ற மனித உரிமை கண்காணிப்பு அமைப்பின் குற்றச்சாட்டை உள்துறை அமைச்சு மறுத்துள்ளது.

குடிநுழைவுத் துறை முகாம்களில் கொள்ளளவைக் காட்டிலும் அதிகமான கைதிகள் உள்ளதால் அங்கு நெரிசல் மிகுந்த காணப்படுகிறது என்ற அந்த வெளிநாட்டு அரசு சாரா அமைப்பின் குற்றச்சாட்டையும் உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சைபுடின் நசுத்தியோன் இஸ்மாயில் நிராகரித்தார்.

நாடு முழுவதும் உள்ள 20 குடிநுழைவுத் துறை தடுப்புக் காவல் முகாம்களைப் பராமரிப்பதற்கு அரசாங்கம் கடந்தாண்டு 12 கோடியே 30 லட்சம் வெள்ளியைச் செலவிட்டது. மேலும் அவர்களுக்கு உணவளிப்பதற்கும் தாயகத்திற்குத் திருப்பி அனுப்புவதற்கான பெர்ரி அல்லது விமானக் கட்டணங்களுக்காகவும் மேலும் 8 கோடி வெள்ளியை செலவிட்டது என்று அவர் சொன்னார்.

இந்த அளவுக்கு அவர்களை நாங்கள் கவனித்து வருகிறோம். ஆனால், நாங்கள் அவர்களை சாகும்வரை துன்புறுத்துவதாக எச்.ஆர்.டபள்யூ. குற்றஞ்சாட்டுகிறது. இவ்விவகாரம் தொடர்பில் விளக்கம் பெறுவதற்காக உள்துறை அமைச்சு மற்றும் குடிநுழைவுத் துறையை நாடாளுமன்ற சிறப்பு செயல்குழு அழைத்தது. இந்த விசாரணைக்கு எச்.ஆர்.டபள்யூ.வுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது என்றார் அவர்.

துன்புறுத்தல் அல்லது இறப்பு தொடர்பான ஆதாரங்களை வெளியிடும் படி கோரப்பட்டபோது அவர்களால் சிறிய ஆதாரத்தைக் கூட முன்வைக்க முடியவில்லை. ஆனால் அவர்களின் பிரசாரம் உலகம் முழுவதும் பரப்பபட்டுவிட்டது என்று அவர் கூறினார்.

இருபதாயிரம் தடுப்புக் காவல் கைதிகளை தடுத்து வைப்பதற்குரிய வசதியை நாடு முழுவதும் உள்ள குடிநுழைவுத் துறையின் தடுப்புக் காவல் மையங்கள் கொண்டுள்ளதாகவும் கடந்த மார்ச் 7ஆம் தேதி வரை நாடு முழுவதும் உள்ள மையங்களில் 13,635 கைதிகள் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

### அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் – கூறிய கருத்து தவறானது

**ஷா ஆலம்-**

அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியம் குறித்து பாஸ் தலைவர் டான்ஸ்ரீ அப்துல் ஹாடி அவாங் கூறுவது தவறானது என்று பார்ட்டி கெ அடிலான் ராக்யாட் துணைத் தலைவர் நிக் நஸ்மி நிக் அகமட் கூறினார்.

இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை அமைச்சராகவும் இருக்கும் நிக் நஸ்மி, அரசு ஊழியர்களின் ஊதியத்தை மறுபரிசீலனை செய்வதற்கான முன்மொழிவு தற்போதுள்ள ஊழியர்களைப் பாதிக்காததால், மத்திய அரசு ஓய்வூதியம் குறைக்கிறது அல்லது நிறுத்துகிறது என்ற ஹாடியின் கூற்று தவறானது என்றார்.

"உண்மை என்ன-வென்றால், தற்போது உள்ள அனைத்து அரசு ஊழியர்களின் ஊதியத்தை மறுபரிசீலனை செய்ய அரசாங்கம் முன்மொழிகிறது மற்றும் தற்போதுள்ள ஓய்வூதியத் திட்டத்தை மாற்றியமைத்து, ஊழியர் சேமநிதி வாரியம் (EPF) போன்ற புதிய ஓய்வூதியத் திட்டத்துடன் புதிய அரசு ஊழியர்களை பணி அமர்த்துவதற்கான விருப்பங்களை ஆராய்கிறது.

ஓய்வூதிய முறையை இபிஎப் பங்களிப்புகளுடன் மாற்றுவதற்கான முன்மொழிவு 2022 இல் கிளந்தான் மாநில அரசு நிறுவனமான யாயாசான் இஸ்லாம் கிளந்தான் (YIK) மூலம் ஏற்கனவே அறிவிக்கப் பட்டது அப்பொழுது அவர்களுக்கு அது இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு எதிரானதாக தெரிய வில்லையா என வினாவினார்.

"அப்படியானால், "YIK" இந்த முன்மொழிவை அறிவித்தபோது, இபிஎப் இஸ்லாமியம் அல்ல அல்லது முஹம்மது நபியின் போதனைகளைப் பின்பற்றவில்லை என்று பாஸ் ஏன் எதிர்க்கவில்லை?" என நிக் நஸ்மி கேட்டார்.



### மாணவர்களிடையே நாளிதழ்கள் படிக்கும் பழக்கம் மலாய் மொழியின் தேர்ச்சியை வலுப்படுத்தும்

**புத்ராஜெயா-**

பள்ளிகளில் நாளிதழ்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்களிடையே மலாய் மொழியின் தேர்ச்சியை வலுப்படுத்த முடியும் என கல்வி அமைச்சு கருதுகிறது.

இந்த நோக்கத்திற்காக, நாட்டின் முக்கிய மலாய்மொழிநாளிதழ்களானபெரித்தாஹரியான், உத்துசான் மலேசியா மற்றும் சினார் ஹரியான் போன்ற இதழ்களுக்கு வாடிக்கையாளர்களாகப் பள்ளிகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

"தற்போதுள்ள ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி நாளிதழ்களை நேரடியாகவும் பள்ளிகள் வாங்கலாம்" என்று அமைச்சகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வாறு செய்வது மாணவர்களின் தேசிய மொழியின் தேர்ச்சியை மேம்படுத்த உதவும் என்று அமைச்சகம் நம்புகிறது.

# மருத்துவச் சேவைக்கு RM78.73 மில்லியன் செலவு

**ஷா ஆலம்-**

மடாணி மருத்துவத் திட்டத்தின் மூலம் குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கு (பி40) தனியார் கிளினிக்குகளில் மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக இதுவரை மொத்தம் RM78.73 மில்லியன் அரசால் செலவிடப்பட்டுள்ளது.

கடந்த 15 ஜூன் 2023 கோலாலம்பூர், கோம்பாக், உலு லங்காட், பெட்டாலிங், கிள்ளான், ஜோகூர் பாரு, கிந்தா, திமூர் லாவுட், கோத்தா கினாபாலு மற்றும் கூச்சிங் ஆகிய 10 பகுதிகளில் இத்திட்டத்தின் முதல் கட்டம் தொடங்கப்பட்டது என்று சுகாதார அமைச்சர் கூறினார்.

"பின்னர் இதன் இரண்டாம் கட்டம் மேலும் 11 பகுதிகளுக்கும், செப்டம்பர் 19 அன்று நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது. கடந்த கால செலவுகள் மற்றும் தற்போதைய கணிப்புகளின் அடிப்படையில், முதல் கட்டமாக 10 மாவட்டங்களில் வாரத்திற்கு RM1.7 மில்லியன் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

"மடாணி மருத்துவத் திட்டம், அரசாங்கத்தின் நிதியுதவியின் நிலைத்தன்மையைக் கணக்கில் எடுத்துக்கொள்வதோடு, இத்திட்டத்தின் செயல்பாட்டை வலுப்படுத்தவும், சீரமைக்கவும் முதல் கட்டத்தில் 10 பகுதிகளில் கவனம் செலுத்துகிறது என டத்தோ ஸ்ரீ டாக்டர் ஜூல்கிப்ளி அகமது கூறினார்.




## பாடு தரவுத்தள அமைப்பு பாதுகாப்பானது

**கோலாலம்பூர்-**
ஒவ்வொரு வாரமும் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான ஹேக்கிங் நடவடிக்கைகளை எதிர்கொண்டாலும், பாடு தரவுத்தள அமைப்பு பாதுகாப்பாக உள்ளது என்று பொருளாதார அமைச்சர் ரஃபிஸி ரம்லி நேற்று உறுதியளித்தார்.

இந்த அமைப்பு ஜனவரி 2 ஆம் தேதி தொடங்கப்பட்டதிலிருந்து பல்வேறு வடிவங்களில் ஹேக்கிங் நடவடிக்கைகளை எதிர்கொண்டதாக அவர் கூறினார்.

“கணினி மேம்பாட்டுக் குழு எடுத்த விரைவான நடவடிக்கையின் விளைவாக பாடு இன்னும் பாதுகாப்பாக உள்ளது என்பதை என்னால் கூற முடியும்.

“ஜியோஃபென்சிங்கை (ஜிபிஎஸ்-அடிப்படையிலான கண்காணிப்பு தொழில்நுட்பம்) செயல்படுத்தவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதன் மூலம், மலேசியாவில் மட்டுமே பாடுவை புதுப்பிக்க முடியும்,” என்று அவர் மக்களவையில் கூறினார்.

மொத்த மலேசிய மக்கள் தொகையில் 19.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 4,292,912 நபர்கள் மார்ச் 10 ஆம் தேதி வரை பாடுவில் தங்கள் தகவல்களைப் பதிவுசெய்து புதுப்பித்துள்ளனர் என்று ரஃபிஸி கூறினார்.

“மேலும், எந்த அமைச்சகம் மற்றும் துறைகளில் தரவு புதுப்பிப்பு இருந்தால், அது தானாகவே பாடு தரவுத்தளத்தில் பிரதிபலிக்கும்.

“மக்கள் உரிய பலன்களைப் பெறுவதற்குக் கொள்கை திட்டமிடல் மற்றும் தரவு திட்ட செயலாக்கத்தை மேம்படுத்துவதற்காக இந்த முயற்சி எடுக்கப்பட்டது,” என்று அவர் கூறினார்.



## RM170 மில்லியன் பந்துவான் வாங் இஹ்சான் விநியோகிக்கப்பட்டுள்ளது

**கோலாலம்பூர்-**
நாட்டில் 2022/2023 வடகிழக்கு பருவமழை (MTL) காலம் முழுவதும் 168,959 குடும்பத் தலைவர் களுக்கு (KIR) கிட்டத்தட்ட RM170 மில்லியன் பந்துவான் வாங் இஹ்சான் (BWI) விநியோகிக்கப் பட்டுள்ளது என்று டேவான் ரக்யாட்டில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், RM560,000 பந்துவான் வாங் இஹ்சான் மரணம் அடைந்தவர்களின் 56 வாரிசுகளுக்கு விநியோகிக்கப்பட்டது என்று பெண்கள், குடும்பம் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சர் டத்தோஸ்ரீ நான்சி சுக்ரி கூறினார்.

மத்திய அரசு தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் (நட்மா) மூலம் அனைத்து மாநிலங்களுக்கும் பேரிடர் உதவிக்காக RM232 மில்லியனை ஆரம்ப ஒதுக்கீடு விநியோகம் செய்யப்பட்டது என்றார்.

“பந்துவான் வாங் இஹ்சான் என்பது பேரழிவால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு அல்ல, மாறாக அவர்களின் சுமையைக் குறைக்க மத்திய அரசின் அக்கறையின் அடையாளம்” என்று அவர் கூறினார்.

டேவான் ராக்யாட்டில் நடந்த கேள்வி பதில் அமர்வின் போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிக் கொள்கை மற்றும் நிதி உதவி உள்ளிட்ட இழப்பீட்டுத் தொகை குறித்து டத்தோ சித்தி சைலா முகமட் யூசோவ் (ரந்தாவ் பஞ்சாங்) கேட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

## அதிக விபத்துகள் நிறுவனங்கள் கண்காணிப்பு

**கோலாலம்பூர்-**
கடந்தாண்டில் அதிக விபத்துகளைப் பதிவு செய்த 6,000 முதலாளிகளை ‘ஓப் செகா’ எனும் நடவடிக்கையின் வாயிலாகச் சமூக பாதுகாப்பு நிறுவனம் (சொக்சோ) கண்காணிக்கவுள்ளது.

விரும்பத்தகாத சம்பவங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகத் தொலைபேசி அழைப்புகள், மின்னஞ்சல்கள், கடிதங்கள், ஒருவருடன் ஒருவர் எனும் நேரடி ஆலோசகச் சேவைகள், பணியிடங்களுக்கு வருகை ஆலோசகச் சேவைகள் ஆகிய நடவடிக்கைகளின் வாயிலாக இந்த கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்படும் என்று சொக்சோ அறிக்கை ஒன்றில் கூறியது.

இந்த சந்திப்புகளின் விளைவாக 931 முதலாளிகள் மத்தியில் விபத்துகளின் எண்ணிக்கை 83.6 விழுக்காடாக குறைந்தது. அந்த விவேகப் பங்காளித்துவம் உரிய பயனைத் தந்துள்ளதை இது காட்டுகிறது என்று அவ்வறிக்கை மேலும் குறிப்பிட்டது.

அதிக விபத்துகளைப் அதாவது 44,856 அல்லது 46.6 விழுக்காட்டு விபத்துகளைப் பதிவு செய்த 6,000 முதலாளிகளை உள்ளடக்கிய அந்த கண்காணிப்பு ‘ஓப் செகா’ நடவடிக்கையின் வாயிலாக 2024ஆம் ஆண்டிலும் தொடரும் என அது தெரிவித்தது.




## வழக்கமான சேமிப்புகளுக்கு 5.50 சதவிகித லாப ஈவுத்தொகை

**கோலாலம்பூர்-**
ஊழியர் சேமநிதி வாரியம் வழக்கமான சேமிப்புகளுக்கு 5.50 சதவிகித லாப ஈவுத்தொகையை அறிவித்தது. அதன் மொத்த விநியோகம் RM50.33 பில்லியன் ஆகும்.

ஷரியா சேமிப்புக்கான 5.40 சதவீத லாப ஈவுத்தொகையை ஊழியர் சேமநிதி வாரியம் அறிவித்தது. இதன் மொத்த விநியோகமான RM7.48 பில்லியன் ரிங்கிட், 2023 ஆண்டுக்கான மொத்த வருமான விநியோகம் RM57.81 பில்லியனுக்கு வழிவகுத்தது.

டிசம்பர் 31, 2023 இல், மொத்த முதலீட்டு வருமானம் RM66.99 பில்லியனை ஊழியர் சேமநிதி வாரியம் பதிவு செய்துள்ளது. இது 2022 இல் பதிவு செய்யப்பட்ட RM51.91 பில்லியனைக் காட்டிலும் 29 சதவீதம் அதிகமாகும்.

“ஊழியர் சேமநிதி வாரியம், லாப ஈவுத் தொகையைப் பெறப்பட்ட வருமானத்திலிருந்து மட்டுமே வழங்குவது ஒரு விவேகமான நடைமுறையாகும்” என்று அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.



# ரிங்கிட்டின் மதிப்புச் சரிவை அலட்சியப்படுத்தவில்லை

**கோலாலம்பூர்-**

ரிங்கிட் மதிப்புச் சரிவை மடாணி அரசாங்கம் அலட்சியப்படுத்தவோ எளிதாக எடுத்துக்கொள்ளவோ கிடையாது. மாறாக, இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை அது தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்று பிரதமர் உத்தரவாதம் அளித்தார்.

அதேசமயம், முதலீட்டு எண்ணிக்கை தொடர்ந்து வலுவுடன் இருப்பதை உறுதி செய்யும் நடவடிக்கையிலும் தாங்கள் ஈடுபட்டு வருவதாக டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தெரிவித்தார்.

ரிங்கிட்டின் மதிப்பை அணுக்கமாக கண்காணித்து வரும்படி மத்திய வங்கி (பேங்க் நெகாரா) பணிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் அரசாங்கத்தின் பங்காக இந்த விவகாரத்திற்குத் தீர்வு காணும் நோக்கில் அமைச்சுகள், அதிகாரிகள் மற்றும் முதலீட்டு மன்றம் உள்ளிட்ட தரப்பினர் தினமும் சந்திப்புகளை நடத்தி வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இது உண்மையில் கவலையளிக்கக் கூடியது. நாங்கள் முன்னோக்கி பார்க்கிறோம். ஆயினும் ஒட்டுமொத்த முதலீட்டைப் பார்க்கையில் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமாக பெறப்பட்டுள்ளது. அவர்கள் (விமர்சனம் செய்வோர்) 1998ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்றனர். அப்போது ரிங்கிட்டின் மதிப்பு வீழ்ச்சி கண்டிருந்ததோடு பணவீக்கமும் அதிகரித்தது. அதோடு மட்டுமின்றி வேலையில்லா விகிதம் உயர்வு கண்டு முதலீடுகளும் இல்லாத நிலை உண்டானது என்று மலேசியாவின் அனைத்துலக நிதி மையமாக துன் ரசாக் எக்ஸ்சேஜ் மையத்தை தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

மீன், கோழி, இறைச்சி, காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை குறைவான விலையில் விற்பதற்கான திட்டங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றார் அவர்.

# ஜெர்மனியிடமிருந்து 4,540 கோடி வெள்ளி

## முதலீட்டு வாய்ப்பு

**பெர்லின்-**

பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமுடன் நடத்தப்பட்ட வட்டமேசை மற்றும் நேரடிச் சந்திப்புகளின் வாயிலாக கிடைப்பதற்குரிய சாத்தியம் உள்ள முதலீட்டின் மதிப்பு 4,540 கோடி வெள்ளியாகும்.

அந்த சாத்தியமுள்ள முதலீடுகளில் புதிய மற்றும் விரிவாக்கம் காணும் முதலீடுகளும் பல்வகைப்படுத்தப்பட்ட திட்டங்களும் அடங்கும் என்று முதலீடு, வர்த்தகம் மற்றும் தொழிலியல் அமைச்சர் தெங்கு டத்தோஸ்ரீ ஸப்ருள் அப்துல் அஜிஸ் கூறினார்.

இந்த சாத்திய முதலீட்டுத் திட்டங்கள் செமிகண்டக்டர், வான் போக்குவரத்து, மருத்துவ உபகரணங்கள், இரசாயனம் மற்றும் சேவைத் துறை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளதாக அன்வாருடனான வட்ட மேசை மற்றும் நேரடிச் சந்திப்பு நிகழ்வுக்குப் பிறகு மலேசிய செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் ஜெர்மனி நகரங்களான ஸ்டெர்கட், முனிக், பெர்லின், பிராங்க்பெர்ட் ஆகியவற்றோடு பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளையும் சேர்ந்த 38 தொழில்துறைகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இது தவிர, எக்ஸ்-ஃபேப், மெலேக்சிஸ், இன்ஃபினியன், டெக்னோலோஜிஸ், ஸ்கோட் ஏஜி மற்றும் ஏர்பஸ் ஆகிய நிறுவன அதிகாரிகளுடனும் அன்வார் நேரடிச் சந்திப்பை நடத்தினார்.

முதலீட்டாளர்களுக்கு வர்த்தக நட்புறவு அணுகுமுறையை கடைபிடிக்கும் சிறந்த முதலீட்டு மையமாக மலேசியா தொடர்ந்து விளங்கி வரும் என்று ஜெர்மனியின் முதலீட்டாளர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

# 'பள்ளிக்குத் திரும்பும்' உதவித் திட்டம் தொடரும்

**கோலாலம்பூர்-**

'பள்ளிக்குத் திரும்பும்' உதவித் திட்டத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை அரசாங்கம் தொடரும் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தெரிவித்தார்.

அண்மையில் தம்பூன் நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெற்ற 'பள்ளிக்குத் திரும்பும்' நிகழ்ச்சியைத் தொடர்ந்து அவர் முகநூலில் வெளியிட்டுள்ள பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

"எனது அரசியல் செயலாளர் சகோதரர் கமில் முனிம் என் சார்பாகத் தம்பூன் நாடாளுமன்றத் தொகுதிக்கான 'பள்ளிக்குத் திரும்பும்" உதவியை வழங்கினார்.

"இந்த திட்டத்தில் 1,500 பெறுநர்கள் பயனடைந்துள்ளனர். இந்த உதவி புதிய பள்ளி அமர்வு விரைவில் நெருங்கி வருவதால் பள்ளி பொருட்களை வாங்குவதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் என்று நம்பப்படுகிறது.

# ஆஸி. நிறுவனங்களின் தலைவர்களுடன் சந்திப்பு

**மெர்போர்ன்-**

ஆஸ்திரேலியாவுக்கு பணி நிமித்தப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அந்நாட்டின் 18 முன்னணி நிறுவனங்களின் உயர் நிர்வாகத் தலைவர்களுடன் மெல்போர்னில் சந்திப்பு நடத்தினார். மலேசியாவில் தங்களின் வர்த்தகங்களையும் முதலீடுகளையும் அதிகரிப்பதற்கு ஊக்குவிக்கும் நோக்கில் இந்த சந்திப்பு நடத்தப்பட்டது.

வட்ட மேசை மாநாடு தவிர்த்து, முதலீட்டாளர்களின கருத்துகளைப் பெறுவதற்காக அந்த முதலீட்டாளர்களுடன் தனிப்பட்டச் சந்திப்பையும் நிதியமைச்சருமான அவர் நடத்தினார்.

மருத்துவ உபகரணங்கள் மற்றும் எஃகு உள்ளிட்ட உற்பத்தித் துறை, தரவு மையம், நிதி மற்றும் வர்த்தகம் போன்ற சேவைத் துறையைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

நடப்பு அரசாங்கம் நிலைத்தன்மையுடன் உள்ளது. மலேசியாவுக்கு முதலீட்டை ஈர்ப்பதற்கான முக்கிய அம்சமாகவும் இது விளங்குகிறது. நாங்கள் தெளிவான புதிய கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

கடந்தாண்டு 32,950 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீடுகளை மலேசியா ஈர்த்துள்ளதாக அன்வார் கடந்த மாதம் கூறியிருந்தார்.

கடந்த 2022ஆம் ஆண்டை விட இது 23 விழுக்காடு அதிகமானது என்பதோடு நாட்டின் வரலாற்றில் மிக உயர்வானதும் ஆகும் என்றார் அவர்.

# ஊழலில் ஈடுபடும் அமைச்சர்கள் பதவி நீக்கப்படுவார்கள்

**கோலாலம்பூர்-**

ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் தனது அமைச்சரவை உறுப்பினர்கள் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் எச்சரித்துள்ளார்.

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி ஊழல் தடுப்பு ஆணையத்திற்குத் (எம்.ஏ.சி.சி.) தாம் உத்தரவிட்டுள்ளதாக அவர் சொன்னார்.

ஏதேனும் புகார்கள் இருந்தால் நாங்கள் விசாரணை நடத்தி சட்டப்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். ஆனால், அத்தகைய புகார்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. சுத்தமான மற்றும் ஊழலிலிருந்து விடுபட்ட அரசாங்கம் என்றத் தோற்றத்தை நிலை நிறுத்த உதவிய எனது நண்பர்களை (அமைச்சர்கள்) நான் வணங்குகிறேன் என்றார் அவர்.

டெண்டர்கள் மற்றும் அதன் தொடர்பில் எடுக்கப்படும் முடிவுகளை எம்.ஏ.சி.சி. அணுக்கமாகக் கண்காணித்து வருவதோடு அதன் விசாரணை வளையத்திலிருந்து எந்த அமைச்சரும் விடுபடுவதில்லை என்றார் அவர்.

மக்களின் பணத்தைப் பாதுகாத்து அதனை அவர்களின் பரஸ்பர நலனுக்காகத் திருப்பிக் கொடுப்பதே முக்கியமானதாகும் எனவும் அவர் கூறினார்.

ஊழலுக்கு எதிராகப் போராடுவது எம்.ஏ.சி.சி.யின் வேலை மட்டும் அல்ல. ஊழல் புகார்கள் குறித்து கேள்விப்பட்டால் உடனே புகார் செய்யுங்கள். ஆனால் பொய்ப்புகார்கள் செய்யாதீர்கள் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மலேசியாவில் அந்நிய முதலீடுகள் அதிகரிப்பதால்

## பொருளாதாரம் வலுப்பெறுகிறது



**கோலாலம்பூர்-**

மலேசியாவை ஒரு முக்கிய முதலீட்டு மற்றும் மூலதன மையமாகப் பார்க்க சர்வதேச முதலீட்டு சமூகத்திற்குப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அழைப்பு விடுத்தார்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் நடந்த இன்வெஸ்ட் ஆசியான் மாநாட்டில் சிறப்புரை ஆற்றிய அவர், மலேசியப் பொருளாதாரம் பற்றிய வலுவான நம்பிக்கையின் அறிக்கையை உயர்த்திக் காட்டினார். இந்த ஆண்டு அதிக முதலீடு, பொருளாதார செயல்திறன் மற்றும் ரிங்கிட்டுக்கான சிறந்த நிலைபாடுகளை எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

மலேசியாவின் பொருளாதாரத்தின் வலுவான மற்றும் மேம்பட்ட அடித்தளங்களை கோடிட்டுக் காட்டும் முக்கிய பொருளாதார குறிகாட்டிகளை முன்வைத்ததோடு, நிதி அமைச்சராகவும் இருக்கும் அவர், மலேசியப் பொருளாதாரம் தொடர்ந்து நிலையான வளர்ச்சியைக் கொண்டிருக்கிறது என்றார்.

"மலேசியா, 2023 ஆம் ஆண்டில், அங்கீகரிக்கப்பட்ட நேரடி முதலீட்டின் அடிப்படையில் 23 சதவீதம் உயர்ந்து, இதுவரை இல்லாத அளவு RM329.5 பில்லியனை அடைந்தோம்.

"2024 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம், உறுதியான முதலீடுகள் புதிய திட்டங்கள், அதிக ஊதியம் தரும் புதிய வேலை வாய்ப்புகள், தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் திறன் மேம்பாட்டுக்கான புதிய வாய்ப்புகள் ஆகியவை மக்களுக்குப் பல நன்மைகளை தரும் என அவர் கூறினார்.

அன்வார் மலேசிய அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் மாற்றத் திட்டத்தைப் பற்றியும் பேசினார், அதே நேரத்தில் இவை அனைத்தும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு சிறந்த மற்றும் சாதகமான அரசியல், பொருளாதார மற்றும் சமூக சூழலை உருவாக்கும் என்பதை வலியுறுத்தினார்.

"மலேசிய மடாணி என்ற தொலைநோக்கு கட்டமைப்பானது, நிதிக் கொள்கை, மானிய சீர்திருத்தம் மற்றும் உயர்நெறி மக்கள் நல்வாழ்வு ஆகியவற்றின் அடிப்படையில் நேர்மறையான, ஆனால் தனியார் பொருளாதார பங்கேற்பாளர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்குக் கூடுதலாக முன்னெடுக்கப்படும் மாற்றங்களை நோக்கமாகக் கொண்ட ஒரு விரிவான மற்றும் ஆழமான அரசாங்கத் திட்டமாகும்.

"எங்கள் மடாணி மாற்றுத் திட்டத்தில் புதிய பொருளாதாரத் தூண்கள் உள்ளன: இது 21 ஆம் நூற்றாண்டின் நிலையான மற்றும் மிகவும் வளமான பொருளாதார மாற்றத்தை ஆதரிக்கும்" என்று அவர் கூறினார்.




# 1.4 கோடி கொள்கலன்

## கிள்ளான் துறைமுகம் சாதனை

**புத்ராஜெயா-**

கிள்ளான் துறைமுகம் கடந்தாண்டு **20** அடி நீளத்திற்கு இணையான 1 கோடியே 40 லட்சத்து 60 ஆயிரம் கொள்கலன்களைக் (டி.இ.யு.) கையாண்டு சாதனை புரிந்துள்ளது. கடந்த 2022ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 1 கோடியே 32 லட்சத்து 20 ஆயிரம் கொள்கலன்களாக இருந்ததாகப் போக்குவரத்து அமைச்சர் அந்தோணி லோக் கூறினார்.

அதே சமயம் தஞ்சோங் பெலேப்பாஸ் துறைமுகத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு1 கோடியே 4 லட்சத்து 80 ஆயிரமாக இருந்த கொள்கலன்கள் எண்ணிக்கை கடந்தாண்டு 1 கோடியே 5 லட்சத்து 10 ஆயிரமாக உயர்வு கண்டதாக அவர் சொன்னார்.

கோலக் கிள்ளான் துறைமுகமும் தஞ்சோங் பெலேப்பாஸ் துறைமுகமும் உலகின் பரபரப்பான 20 துறைகமுகங்களில் ஒன்றாகத் தொடர்ந்து விளங்கி வருகின்றன என்று அவர் தெரிவித்தார்.

உலக விநியோகச் சங்கிலியில் மலேசிய பொருளாதாரம் முக்கிய அங்கமாக விளங்குவதை இந்த சிறப்பான அடைவு நிலை பிரதிபலிக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

கோலக்கிள்ளான் துறைமுகத்தில் கடல்மார்க்க சரக்கு (கார்கோ டிரான்ஷிப்மெண்ட்) மற்றும் உள்ளூர் சரக்கு கையாளுதல் தொடர்பான விகிதாசாரம் கடந்த 2014ஆம் ஆண்டு 70-30 ஆக இருந்த நிலையில் கடந்தாண்டு அது 55-45 ஆக மாற்றம் கண்டு என்றார் அவர்.

சுங்கத் துறையின் நுழைவாயில் வாயிலாக அல்லாமல் சரக்குகளை ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கு மாற்றும் முறை கார்கோ டிரான்ஷிப்மெண்ட் எனப்படுகிறது. உள்ளூர் சரக்கு என்பது உள்நாட்டில் பெறப்படும் மற்றும் உற்பத்தி செய்யப்படும் சரக்கை குறிக்கிறது.

# 32,950 கோடி வெள்ளி முதலீட்டை

## மலேசியா ஈர்த்தது

**கோலாலம்பூர்-**

மலேசிய வரலாற்றில் முதன் முறையாக மிக அதிகமாக அதாவது 32,950 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீட்டை மலேசியா கடந்தாண்டு அங்கீகரித்தது. கடந்த 2022ஆம் ஆண்டில் பெறப்பட்ட முதலீட்டைக் காட்டிலும் இது 22 விழுக்காடு அதிகமாகும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

அந்த முதலீட்டில் 57.2 விழுக்காடு அந்நிய நாடுகளிலிருந்தும் எஞ்சிய 42.8 விழுக்காடு உள்நாட்டிலிருந்தும் பெறப்பட்டதாக அவர் சொன்னார்.

இந்த சிறப்பான அடைவு நிலைக்கு 35.1 விழுக்காட்டு உள்நாட்டு முதலீட்டு அதிகரிப்பும் 15.3 விழுக்காட்டு வெளிநாட்டு முதலீட்டு அதிகரிப்பும் துணை புரிந்தன என்று அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

நாட்டின் முதலீட்டுச் சூழலின் அடைவு நிலை மிகவும் பிரமிக்கத்தக்க வகையில் உள்ளதை இதன் மூலம் காணமுடிகிறது. மடாணி அரசாங்கத்தின் கடந்த ஓராண்டு கால ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் மீட்சி பெறுவதையும் எழுச்சி பெறுவதையும் இது பிரதிபலிக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அணுமுறையின் வாயிலாகக் கடைபிடிக்கப்படும் நட்புறவு முதலீடு மற்றும் நட்புறவு வர்த்தகக் கொள்கை பலனளிக்கத் தொடங்கியுள்ளதை இந்த அடைவு நிலை மறைமுகமாக உணர்த்துகிறது என்றும் அவர் சொன்னார்.

மொத்தம் 5,101 திட்டங்களை உள்ளடக்கிய அந்த முதலீடுகள் வாயிலாக நாட்டு மக்களுக்கு 127,000 வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்கான சாத்தியம் கிட்டியுள்ளது என்றார் அவர்.

# இணைய ஊடகங்களைக் கட்டுப்படுத்தச் சட்டமா?

**புத்ராஜெயா-**

நாட்டிலுள்ள இணைய ஊடகங்களைக் கட்டுப்படுத்-துவதற்காக 1984ஆம்ஆண்டு அச்சு இயந்திர மற்றும் பிரசுரச் சட்டத்தில் திருத்தம் செய்யப் படவுள்ளதாக கூறப்படுவதை உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சைபுடின் நசுத்தியோன் இஸ்மாயில் மறுத்துள்ளார்.

அந்த சட்டம் தொடர்பில் விவாதங்கள் நடத்தப்பட்டு வருவதை ஒப்புக் கொண்ட அவர், எனினும் விதிமீறல் மற்றும் தவறான நடத்தைக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை அதிகரிப்பதை மட்டுமே அவ்விவாதம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார்.

இணைய ஊடகங்களை கட்டுப்படுத்துவது தொடர்பான திருத்தங்கள் எங்கள் ராடாரில் அறவே கிடையாது என்பதோடு இதன் தொடர்பில் எந்த தரப்பிடமிருந்தும் எங்களுக்கு எவ்விதமான பரிந்துரையும் வரவில்லை என்று அவர் இங்கு நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

இந்த செய்தியைக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். நானும் அமைச்சின் தலைமைச் செயலாளர் டத்தோ ருஜி உபியும் அதிலுள்ள ஆட்சேபத்திற்குரிய பகுதி எது என்பதை ஆராய்ந்தோம். அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்ற நிலைப்பாட்டை நாங்கள் ஒருபோதும் எடுக்கவில்லை. அவ்வாறு கூறப்படுவதில் உண்மையும் இல்லை என்று அவர் தெளிவுபடுத்தினார்.

ஊடக மன்றத்தை உருவாக்குவது தொடர்பான சட்டங்களை சட்டத் துறை அலுவலகம்தற்போதுதயாரித்துவருவதாகவும் பின்னர் அது அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டு அடுத்தக் கட்டமாக நாடாளுன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று ஊடகங்கள் முன்னதாக செய்தி வெளியிட்டிருந்தன.



# 2024 ஒலிம்பிக் போட்டி – தேசிய விளையாட்டு வீரருக்கு கார் பரிசு

**கோலாலம்பூர்ரி-**

பாரிஸில் ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11 வரை நடைபெறவுள்ள 2024 ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் கொண்டு வரும் தேசிய விளையாட்டு வீரருக்கு வெளிநாட்டு கார் பரிசாக வழங்கப்படும்.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வில் வெற்றியடையும் நாட்டின் முதல் விளையாட்டு வீரர்களுக்கு வெகுமதி அளிக்க ஆர்வமாக உள்ள கார் நிறுவனத்திடம் இருந்து ரோட் டு கோல்ட் (RTG) குழு ஒரு சன்மானத்திகான உறுதியை பெற்றுள்ளது என்று இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர் ஹன்னா யோ கூறினார்.

இருப்பினும், பாரிஸ் 2024 இல் நாட்டைப் பெருமைப்படுத்தும் விளையாட்டு வீரர்களுக்கு அரசாங்க நிறுவனங்கள் (ஜிஎல்சி) உள்பட உள்ளூர் நிறுவனங்கள் வெகுமதி அளிக்க முன் வரும் என்றும் ஹன்னா நம்புகிறார்.

"ஒலிம்பிக் பதக்கம் வென்றவர்களுக்கு வெகுமதி வழங்க நாங்கள் உள்ளூர் நிறுவனங்களுக்கு வாய்ப்புகள் அளிக்க விரும்புகிறோம்,

"எனவே எந்த ஒரு உள்ளூர் நிறுவனமும் விளையாட்டாளர்களுக்கு சன்மானம் வழங்க தயாராக இருந்தால், ஆர்டிஜி ஒருங்கிணைப்பாளர் டத்தோ ஸ்டூவர்ட் ராமலிங்கத்தை தொடர்பு கொள்ளலாம்" என்று இன்று ஆர்டிஜி குழு கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறினார்.

ஒலிம்பிக் பதக்கங்கள் வெல்லும் விளையாட்டு வீரர்கள், வென்ற பதக்கத்தின் நிறத்திற்கு ஏற்ப வெற்றி பரிசுத் திட்டத்தை (ஷாகம்) பெற தகுதியுடையவர்கள்.

ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டியில் தங்கம் வென்றவர்கள் RM1 மில்லியனைப் பெறுவார்கள், அதே சமயம் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் வென்றவர்கள் RM300,000 மற்றும் RM100,000 முறையே பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

# சுக்மாவில் முதல் மூன்று நிலைக்குச் சிலாங்கூர் இலக்கு



**ஷா ஆலம்-**

எதிர்வரும் ஆகஸ்ட் 17 முதல் 24 வரை நடைபெறவுள்ள 21வது மலேசிய விளையாட்டுப் போட்டியில் (சுக்மா) மொத்தம் 1,138 சிலாங்கூர் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்வர்.

இந்த முறை சரவாக்கில் நடைபெறும் இப்போட்டி 37 விளையாட்டுகளுடன் வரலாற்றில் மிக அதிகமான போட்டிகளை கொண்டது என விளையாட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் நஜ்வான் ஹலிமி கூறினார்.

"நாங்கள் முதல் மூன்று நிலையில் வெற்றி பெறும் அணிகளாக இருக்க வேண்டும். கடந்த சுக்மா பதிப்பில், நாங்கள் நான்காவது இடத்தில் இருந்தோம், இந்த முறை நாங்கள் முன்னேறுவோம்," என்று அவர் கூறினார்.

சிலாங்கூர் மாநில சட்டமன்ற (டினஸ்) அமர்வில் விளையாட்டுக்கான மாநிலக் குழுவின் தயார்நிலை தொடர்பான ஸ்ரீ செர்டாங் சட்டமன்ற உறுப்பினர் அப்பாஸ் அஸ்மியின் கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

போட்டிக்கு தயாராகும் வகையில் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள மாநில அரசு மொத்தம் 8 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கியதாக நஜ்வான் கூறினார்.

"சபா (RM27.2 மில்லியன்), சரவாக் (RM23.1 மில்லியன்) மற்றும் திரங்கானு (RM20 மில்லியன்) உள்ளிட்ட சவாலான மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இந்த தொகை குறைவாகும்.

கடந்த மாதம், சிலாங்கூர் மாநில விளையாட்டு கவுன்சில் கொரியாவின் "Gyeonggido Sports Council (GSC)" உடன் SUKMA க்கு தயாராகும் வகையில் விளையாட்டு அறிவியல் மற்றும் தடகள மேம்பாட்டில் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ள ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.



# 'ஏஹ்சான் ஃபன் ரன்' நிகழ்வில் 800 பேர் பங்கேற்பு

**கோல சிலாங்கூர்-**

சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டு கழகத்தின் (பி.கே.பி.எஸ்.) ஏற்பாட்டில் இங்குள்ள சிலாங்கூர் ஃப்ரூட் வேலியில் நடைபெற்ற ஏஹ்சான் ஃபன் ரன் எனும் ஓட்டப்பந்தய நிகழ்வில் 800க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அந்த மையத்தின் மேம்பாடுகளையும் புதிய தயாரிப்புகளையும் பிரபலப்படுத்தும் நோக்கில் பி.கே.பி.எஸ். இத்தகைய நிகழ்வுக்கு முதன் முறையாக ஏற்பாடு செய்துள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

சிலாங்கூர் ஃப்ரூட் வேலி கடந்தாண்டு முதன் முறையாக மாநில அரசுக்கு 800,000 வெள்ளியை லாபமாக ஈட்டித் தந்தது. இந்த தொகை குறைவானதாக இருக்கலாம். ஆனால், இந்த மையம் குறிப்பாக பள்ளி விடுமுறை காலங்களில் வருகையாளர்களின் ஈர்ப்பு மையமாக விளங்கி வருவதால் இது சிறப்பான தொடக்கமாக கருதப் படுகிறது என்று அவர் தெரிவித்தார்.

காய்கறிகள் மற்றும் பழ மரங்களை நடுவது உள்ளிட்ட பல புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பி.கே.பி.எஸ். திட்டமிட்டுள்ளது. இது தவிர 400 ஏக்கரில் டுரியான் பயிரீட்டு திட்டமும் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இண்டர்நெட் ஆஃப் திங்கிங் வாயிலாக புத்தாக்கத்தை பயன்படுத்தி கஃபே டாப்போர் ஏஹ்சான் திறக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

இந்த மையத்தின் லாபத்தை அதிகரிப்பதற்கு ஏதுவாக அங்கு டிராம் வண்டி சேவை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் போன்ற புதுப்பிப்பு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ள விருக்கிறோம் என்று சிலாங்கூர் ஃபன் ரன் நிகழ்வை தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

சிலாங்கூர் ஃப்ரூட் வேலிக்கு மேலும் அதிகமான சுற்றுப்பயணிகளை ஈரக்கும் நோக்கில் பி.கே.பி.எஸ். புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள காஃபே டாருள் ஏஹ்சான் உணவகத்தையும் அமிருடின் திறந்து வைத்தார்.



# சிலாங்கூர் ஸ்மார்ட் பஸ் சேவை
## அதிகமான பயணிகள் பயன்படுத்தியுள்ளனர்

**ஷா ஆலம்-**

சிலாங்கூர் ஸ்மார்ட் பஸ் சேவையை 2015 முதல் 67 மில்லியனுக்கும் அதிகமான பயணிகள் பயன்படுத்தியுள்ளனர் என பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அத்திட்டத்தின் இலக்கை எட்டியுள்ளதாக வீட்டமைப்பு ஆட்சிக்குழு உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சேவை லாபம் ஈட்டுவதற்காக அல்ல, மாறாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் பிரிவினரின் நிதிச் சுமையைக் குறைப்பதற்காகவே செயல்படுத்தப்பட்டது என்று போர்ஹான் அமன் ஷா விளக்கினார்.

"உள்ளூர் அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட நிறுவனங்களின் பராமரிப்பு உட்பட ஒட்டுமொத்த செயல்பாட்டுச் செலவுக்காக மாநில அரசு கடந்த ஆண்டில் RM15.03 மில்லியனைச் செலவிட்டுள்ளது" என்று அவர் கூறினார்.

சிலாங்கூர் ஸ்மார்ட் பஸ்ஸின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கும், தேவைக்கேற்ப போக்குவரத்து சேவை (டிஆர்டி) மூலம் வேன்கள் மற்றும் மினிபஸ்களைக் கூடுதலாக வழங்குவதற்கும் சிலாங்கூர் இந்த ஆண்டு RM5 மில்லியனை ஒதுக்கியுள்ளது.


# மந்திரி புசாருக்குப் பெரிக்கத்தான் உறுப்பினர் ஆதரவு

**ஷா ஆலம்-**
மந்திரி புசார் தலைமைத்துவத்திற்குப் பெரிக்கத்தான் நேஷனல் கூட்டணியைச் சேர்ந்த செலாட் கிள்ளான் உறுப்பினர் ஆதரவு தெரிவித்திருப்பது சிலாங்கூர் மாநில அரசு நிர்வாகம் சரியான தடத்தில் பயணிப்பதை காட்டுகிறது என்று அரசாங்க ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்கள் பிரிவு (பி.பி.சி.) கூறியது.

ஒற்றுமைக்காகவும் அனைவரின் சுபிட்சத்திற்காகவும் அரசியல் வேறுபாடுகளை மறந்து சட்டமன்றத்திலும், சட்டமன்றத்திற்கு வெளியிலும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு செயல்படுவதை பி.பி.சி. வரவேற்கிறது என்று அவர் சொன்னார்.

மலாய் ஆட்சியாளர்களுக்கு எதிராக பரப்பப்படும் ஆதாரமற்றக் குற்றச்சாட்டுகள் விவகாரத்தில் மௌனம் சாதிக்கும் சிலாங்கூர் மாநிலப் பெரிக்கத்தான் நேஷனல் போக்கின் காரணமாகத் தாம் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தலைமைத்துவத்திற்கு ஆதரவு வழங்குவதாக அப்துல் ரஷிட் நேற்று கூறியிருந்தார்.

இது தாம் சுயவிருப்பத்தின் பேரில் எடுத்த முடிவு எனக் கூறிய அவர், பெரிக்கத்தான் கூட்டணியின் இந்த நிலைப்பாடு இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த மலாய்க்காரர்களின் கோட்பாடுகளுக்கு எதிராகவும் உள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.



# செலங்கா செயலி தரவுகள் பாதுகாப்பானவை

**கோலாலம்பூர்-**
செலங்கா செயலி தரவுத்தளத்தில் சேமிக்கப்பட்டுள்ள பயனர்களின் தனிப்பட்ட தகவல்கள் கசியாமல் பாதுகாப்பாக இருக்கும்.

இணையத்திலிருந்து தரவு மீறல் நடந்ததாகக் குற்றஞ் சாட்டப் பட்டாலும் பயனர் பாதுகாப்பு மற்றும் தனியுரிமைக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்படுகிறது என அச்செயலி நிறுவனம் தெரிவித்தது.

"குறிப்பிட்ட தரவு எங்கள் தரவுத்தளத்தில் இருந்தவை அல்ல என்பதை நாங்கள் தெளிவுபடுத்த விரும்புகிறோம். செலங்காவில் சேமிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட தரவு பாதுகாப்பாக உள்ளது.

"பயனர்களின் தரவின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சிறந்த நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்துகிறோம் மற்றும் பராமரிக்கிறோம் என்பதை உறுதியளிக்க விரும்புகிறோம்" என்று "Selangkah Ventures Sdn Bhd" தெரிவித்தது.

பிப்ரவரி 26 வெளியாகிய தி ஸ்டாரின் அறிக்கையைத் தொடர்ந்து இந்த பதிவு வெளியிடப்பட்டது. அதாவது குறிப்பிட்ட செயலியில் ஐந்து மில்லியனுக்கும் அதிகமான பயனர்களை உள்ளடக்கிய தரவு விற்பனை நடந்ததாகத் தி ஸ்டார் கூறியது.

மேலும், தரவு மூலமானது கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான 10,027 கோப்புகளை உள்ளடக்கியது, இதன் விலை US$1,000 (RM4,761) என பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த செயலி 2021 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, கோவிட்-19 தொற்றுநோயாளிகளின் போது தொடர்புகளை கண்டறிய உதவியது மற்றும் சிலாங்கூர் அரசாங்கத்தின் கீழ் பல்வேறு திட்டங்களை அணுகுவதற்கு அதன் செயல்பாடு இப்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.



# சிலாங்கூர் மாநில வளர்ச்சிக் கழகத்தின் நிதி வலுவான நிலையில் உள்ளது

**ஷா ஆலம்-**
சிலாங்கூர் மாநில வளர்ச்சிக் கழகத்தின் (பிகேஎன்எஸ்) நிதி வலுவான நிலையில் உள்ளது மற்றும் எதிர்காலத் திட்டங்களுக்கு நிதி அளிக்க கூடியதாகவும் உள்ளது என்று டத்தோ மந்திரி புசார் கூறினார்.

கடந்த பிப்ரவரியில் மதிப்பீட்டு நிறுவனம் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில், ஜூன் 2023 நிலவரப்படி, மாநில அரசின் துணை நிறுவனத்திடம் RM804 மில்லியன் ரொக்கம் உள்ளது என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

"மேலும், 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரை பார்க்கும்போது. வருமானம் அதிகரித்துள்ளது. அதில் 2019 மற்றும் 2020 கோவிட் – 19 தொற்று நோய் ஏற்பட்ட காலம் என்பது கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால், அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு (2015, 2016, 2017) நிதியின் நிலை எதிர்மறையாக இருந்தது.


"இதற்கு முன் 2014, 2015, 2016, 2017 முழுவதும் ஏற்பட்ட இழப்புகளை நாங்கள் செலுத்த வேண்டியிருந்தது. அவை மிகப் பெரிய தொகையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

"தாமதமான சில திட்டங்களை சிறப்பாகச் சமாளிக்க முடியும், நாம் சிறப்பாகவும் சரியான பாதையில் இருக்கிறோம்" என இன்று சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில் கூறினார்.

மலேசியன் ரிசோர்ஸ் கார்ப்பரேஷன் பிஎச்டி (எம்ஆர்சிபி) கட்டிடம் மற்றும் கோத்தா டமன்சாராவில் உள்ள நிலத்தின் ஒரு பகுதி உட்பட செயல்படாத சொத்துக்களை விற்பது அதிக கடன் மற்றும் சுமைகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையாகும் என்று கூட்டத்திற்குப் பிறகு சந்தித்தபோது அவர் கூறினார்.

"டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலி பிரச்சினையை எழுப்ப விரும்பினார், ஆனால் மூன்று ஆண்டுகளாக மந்திரி புசாராக இருந்த காலத்தில் குறிப்பிட்ட பிரச்சனையைத் தீர்க்க அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றார்.

# நீரின் கொள்ளளவு 85 விழுக்காடாக உள்ளது



**ஷா ஆலம்-**
நாடு தற்போது வெப்ப நிலையை எதிர்கொண்டாலும் சிலாங்கூரில் உள்ள ஏழு அணைக்கட்டுகளில் நீர்மட்டம் பாதுகாப்பான அளவில் உள்ளது.

மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்த் தேக்கங்களிலும் நீரின் கொள்ளளவு 85 விழுக்காட்டிற்கும் மேல் உள்ளதாக அடிப்படை வசதி மற்றும் விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹாஷிம் கூறினார்.

இதுவரை அபாய நிலை எதுவும் இல்லை. மூன்று அணைகளில் 85 சதவீதத்தில் நீரின் உள்ள வேளையில் மீதமுள்ள அணைகளில் 90 சதவீதத்திற்கு மேல் உள்ளது. 70 சதவீதத்திற்கும் குறைவான அளவு அபாயக்கட்டத்திற்கான அறிகுறியாகும் என்று அவர் தெரிவித்தார்.

நிலைமை இன்னும் சீராக உள்ளது, இன்னும் மழைப் பொழிவு உள்ளது. ஆனால், எல் நினோ பருவநிலை மாற்றம் இரண்டாவது காலாண்டில் அதாவது இவ்வாண்டு ஜூன் தொடங்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதனையொட்டி நாங்கள் இன்னும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

சிலாங்கூர் மாநில சட்டமன்ற கூட்டத்திற்குப் பிறகு அனெக்ஸ் கட்டிடத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எச்சரிக்கை கட்டத்திலான வெப்ப நிலை 21 இடங்களில் பதிவாகியுள்ளதாக மலேசிய வானிலை ஆய்வுத் துறை தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருந்தது.

Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor